# சுடர்
CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்

வைகாசி
1981



விலை ரூபா 2-00

# வாசகர் வாய்மொழி

## பாராட்டுக்கள்!

எம். எம். நௌசாத் எழுதிய வெளிச்சத்துக்கு வருவோம் எனும் சிறுகதை முதற் பரிசுக்குத் தரமான கதை. இக்கதாசிரியருக்கும் மணிக்கதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அன்புள்ள டாக்டர் இரண்டாம் காட்சி ஆகிய கதைகளை எழுதியவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். அரியின் மனம்விட்டு சில வார்த்தைகள் அப்பட்டமான உண்மை.

ரீ. எஸ். அபுல்ஹசன்
139B பெரியநீலாவணை-2 கல்முனை.

## எதிர்பார்ப்பு!

இலங்கை நண்பர் வழி "சுடர்" மாத இதழ் கிடைக்கப் பெற்று கண்டேன். படித்தேன், சுவைத்தேன். அதில் அடங்கிய அத்தனையும் முத்துக்கள். எங்கள் நூல் நிலையத்திற்கு இலங்கை நண்பர்களிடமிருந்து கதை, கவிதை, நாவல் முற்றும் சிறந்த சஞ்சிகைகள் பெற விரும்புகிறேன். எங்களின் விருப்பத்தை நண்பர்கள் பூர்த்திசெய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நூல்களை அனுப்பவேண்டிய முகவரி.

M. KANNAN 413, BLOK 20
FELDA LUI TIMUR—BAHA. N. S
MALAYISIA.

## தெரிந்திலையோ?

திங்கள் தோறும் தித்திக்கும் ஏடாய்
எங்கள் இதயங்களில் வீற்றிருக்கும்—சுடரே!
தங்கள் சொந்த விலாசம் தராது,
சந்திப் புத்தகக் கடைக்குச் சென்று
பந்தியில் நின்று உனைப் பெற்று
உமது இன்பத்தமிழோடு இதயம் கலக்கும்
இளசுகள்— எமது அன்பைத் தெரிந்திலையோ?.

மகேஸ் பாஸ்கரி, 57, இறம்பைக் குளம்,
வவுனியா.

## முழுமை முத்திரை

தமிழ்ப் பித்தனின் முதலிடம் தரமுள்ளது. திடீரென்று "இச்"செய்து விட்டார்- ரவிப்பிரியாவின் இரண்டாமிடம் சற்று உயிர்ச்செறிவில்லை! கதை கற்பனையாயினும் யதார்த்தமொடு நோக்கின் கருவில் ஒரு சிறு 'சிதைவு வேலைக்கார "சிறுமி"யிடம் ஆபத்தான நித்திரை மாத்திரைகளை அளவுக்கதிகமாய்க் கொடுத்து அதில் பாதியைப் பாவிக்க எந்த அறிவில்லாத தாய் கூறுவாள். மொத்தத்தில் சித்திரை முழுமை முத்திரையே!

மா. இராஜலிங்கம், அக்கரைப்பற்று.

## அருமுத்து!

சித்திரைப் புது மலராய்
சித்திரப் பனி மலராய்
முத்துக்கள் பலதை தாங்கி
கொத்தாக வந்த சுடரே
ஆறுண்டு கடந்து நல்ல
அருமுத்தாய் நீ திகழ்ந்தாய்

க. புஷ்பகுமார், உடுத்துறை தெற்கு,
செம்பியன்பற்று.

## ஏழில் எழில்!

ஏழாவதாண்டில் எடுத்தடிவைக்கும்
எழில் கொஞ்சும் சுடர் கண்டேன்?
சித்திரைச் சுடரின் சிறப்பினை மெச்சி!
பத்தரை மாற்றுத் தங்கமென்றேன்!

நிலா தமிழின்தாசன் நிலாவெளி-3

## அதைவிட இது...!

"அலைபாயும் நெஞ்சங்களை வெகு சிறப்பாக உயிரோட்டத்துடன் ஆரம்பித்த, தமிழ் புதல்விக்கும் அதை யதார்த்தமாக நகர்த்திய நசீத்துக்கும் எனது வாழ்த்துக்கள் பன்விலையூரானின் 'பஸ் பகிடி'யை நினைக்க நினைக்க சிரிப்புவருகிறது. ஆனாலும் ஒரு குறை. 'இரண்டாம் காட்சி" என்ற மணிக்கதையைவிட, "அன்புள்ள டாக்டர்" எனும் கதை எந்த விதத்தில் சிறந்தது? அதற்கு முதலிடம் கொடுத்துள்ளீர்களே !

—ஸ்ரீதேவிப்பிரியா 'கண்ணை டெக்ஸ்டயில்ஸ்'
பள்ளக் கெட்டுவ

## காலம் பதில் தரும்!

பங்குனி 1981 சுடர் இதழ் படித்தேன். நான் முதலும் ஒரு தடவை எழுதியுள்ளேன். ஈழத்தில் இன்று தோன்றியுள்ள இலக்கிய உணர்வுக்கு சுடர் பெரிதாக வரவேண்டும் அல்லது மாதம் இருமுறை வரவேண்டுமென. ஆனல் அது முடியாத காரியம் என்பது தெரியும். ஆயினும் காலம் இத்தேவைக்கு ஒரு பதில் தரும் என நம்புகிறேன்.

—அருட்திரு வி. சிவரத்தினம்
மெதடிஸ்த ஆலயம், புதுக்குமம், புளியங்குளம்.

ஆசிரியர்: கரிகாலன்
துணை ஆசிரியர்: அரி

வள்ளுவராண்டு: 2012
சுடர்: 7
ஒளி: 2
வைகாசி, 1981
தொடக்கம்: சித்திரை 1975

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

# கசாப்புக்கடை !

**ஈழத் தமிழ் மாநிலத்தில் நடப்பது அரசாங்கம் அல்ல- அசல் கசாப்புக்கடை. இக்கசாப்புக் கடைகளை நேரடியாக நிருவகிப்பது ஆயுதப் படைகள்- காவற் படைகள்-சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஏவற்படைகள்-தமிழ் மண்ணிலே விதேசிக்கு விலைபோய்விட்ட கூலிப் படைகள். இந்தக் கசாப்புக் கடையிலே தமிழ் மானிடனின் உடல் பல்வேறு பதங்களில் துடிக்கிறது-தொங்குகிறது.**

தலைகீழாகவும், தலை வேறு முண்டம் வேறாகவும், குற்றுயிர் குறை உயிராகவும், சித்திரவதைக்குள்ளாகிச் சிதைந்த உறுப்புக்களாகவும், உயிர்போன உடல்களாகவும் அம்மணக் கோலத்தில் தமிழ் மானிடம் அலங்கோலமாகக் காட்சி தருகிறது. கையில் சிக்கிய தமிழ் மகனை கண்ட கண்ட இடங்களில் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கிறான் அதிஉத்தமனாரின் காவல் படையைச் சேர்ந்த புலையன். மூச்சுத் திணறி தீனக்குரலில் அரற்றுகிறான் திராவிட மகன். வெறிபிடித்த புலையர்கள் அப்பாவித் தமிழ் மக்களை வீதியெங்கும் விரட்டியடித்துப் பிடித்து வருகின்றனர். சிக்கிவிட்ட தமிழன் சுக்குநூறாக உடைக்கப்படுகிறான். தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்படுகின்றனர். சிறைச்சாலைகளில் வதைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு நாதியில்லை. அவர்களைப் பற்றிய சேதியில்லை. குய்யோ முறையோ என்று கூக்குரலிட்டுக் கதறுகிறான் தமிழ் மனிதன்.

**1981 மே மாதம் 31-ஆம் தேதி ஜே.ஆரின் கூலிப்படைகள் யாழ்ப்பாணத்தில் புதிதாக எதையும் புரிந்துவிடவில்லை. இந்த அசுர ஆட்சியில் காவற்படையினரின் அராஜகத்தால தமிழ்மகன் அவலச் சுவையைத் துய்ப்பது இது தான் முதல் தடவையல்ல. ஆயினும், அராஜகமும் அட்டூழியமும் இம்முறை புதிய பரிமாணங்களுடன் பரிணமித்திருக்கின்றன.**

* யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் காவற்றுறைக் கொலைஞரிடமிருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறார். அவரது வீடு தீக்கரையாக்கப்பட்டு சாம்பர்மேடாகியிருக்கிறது. பாராளுமன்ற ஜனநாயகத்தின் பாதுகாவலர்களின் ஆட்சியிலே இத்தகைய இரத்த வெறியென்றால், பாராளுமன்றப் பாசாங்குகளும் மனிதவுரிமை மாய்மாலங்களும் காட்டாது, பச்சையாகவே அரசியல் எதிரிகளை வேட்டையாடிய இடி அமீன் எத்துணை யோக்கியன்!

* த. வி. கூட்டணியின் தலைமை அலுவலகம் தீக்கிரையாகி தரைமட்டமாகியுள்ளது.

* யாழ்ப்பாண மாநகரத்தின் மையப்பகுதிகள்—ஆவணவீதிகளும் அங்காடிகளும் சுவாலைவிட்டு எரிந்துகொண்டிருக்கின்றன.

* 1977 ஆம் ஆண்டு இனக்கொலையின்போது காவற்றுறைக் காடையரால் தீக்கிரையாக்கப்பட்டு மாநகரசபையினால் புனரமைக்கப்பட்ட கடைகள் வெறியரின் வேள்வித்தீயில் மீண்டும் கொழுந்துவிட்டு எரிகின்றன.

* பொதுமக்களின் வாகனங்கள் வீதிதோறும் பொசுங்கிப்போய் கிடக்கின்றன.

* இத்தலையங்கத்தை எழுதும் வேளையில் இந்த ஊழிக்கூத்து தீவிரமாக விரிவடைவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழனின் புண்களை ஆறவிடாமல் கீறிக் கிழித்துக்கொண்டிருக்கிறது சிங்கள சைனியம்.

**வெறியர் மூட்டிய வேள்வித்தீயிலே தமிழன் விடுதலை ஜனித்துக்கொண்டிருக்கிறது.**

# வசந்தம் எங்கே?

—முல்லைமணி—

மன்மதனும் சீதனப்பேய் தன்னைக் கண்டு
மலர்ப்பாணம் தொடுப்பதற்கே மறந்து விட்டான்.
கன்னியுமோ காளையது பணம்பிற் காக
காதலிக்க மறுக்கின்றாள் 'பென்சனோடு'
உன்னதாம் பதவியுடை ஒருவன் இன்றேல்
உதாசீனம் செய்கின்றாள் வசந்தம் தென்றல்
என்னபயன் விளைவிக்கும் இந்த நாளில்
'எடுபாஸ்போட் மிடில் ஈஸ்று' போவதற்கே.

என்றிளைஞர் பறக்கின்றார் எரியும் வெய்யில்
எதனையுமே பொசுக்குகின்ற நாடு நோக்கி
தென்றலினைக் காணுதற்கு முடியா தங்கு
சேர்க்கின்ற பணம் வாழ்வை வசந்தமாக்கும்
இன்றிங்கே பெற்றெடுத்த தந்தை தாய்க்கு
இறுதியினில் கொள்ளி வைக்க மகனுமில்லை
நன்றிதுவோ குயில்பாட மறுக்கும் இங்கு
நாட்கணக்கில், காகந்தான் கரைந்து நிற்கும்.

கிருமிநா சினியினது கொடுமையாலே
கிட்டவுமே கருவண்டு மலரின் பக்கம்
ஒருபோதும் செல்வதில்லை காதல் கீதம்
ஒன்றுமே இசைப்பதில்லை வசந்தம் எங்கே?
வருகின்ற வருவாயைக் கொண்டு தங்கள்
வாழ்க்கையினை யோட்டுதற்கு இயலா தின்று
திருமணமேன்? என்றெண்ணி இளைஞர் கூட்டம்
திரும்பியே பாராது மாதர் தம்மை.

# அண்ணே... சின்னண்ணே

**— கனக. மனோகரன் —**

(கட்டுரையாளர் கனக. மனோகரன் அமரரின் தொழிற்கூடத்தில் கனிட்ட வழக்குரைஞராக தொழில் பயின்றவர் — பணியாற்றியவர் — அன்னார்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.)

**கதிரவேற்பிள்ளை** என்ற மனிதர் உறங்கிவிட்டார். நித்தியமற்ற மனிதர்கள் வாழ்விலெல்லாம் நிச்சயமாக நடக்கின்ற 'நிகழ்ச்சி' தான் நடந்து முடிந்திருக்கிறது. சாசுவதம் பெறாத சாதாரணர்களின் வாழ்வில் 'சாவு' என்பது அசாதாரணமானது அல்லவே! ஆனால்......

சாதாரணனாக — சாமான்யனாகப் பிறந்த அவரின் 'சாவு' அசாதாரணமானதாக — அதிர்ச்சி தருவதாக அமைந்திருக்கிறது. இலட்சக்கணக்கானவர்கள் இந்த அதிர்ச்சிக்கு இலக்காகியிருக்கிறார்கள்!

தனக்கெனவாழாது, தாழ்வுற்று தறிகெட்டுக் கிடந்த தமிழுக்காய் அவர் வாழ்ந்தார். ஒட்பமிகு தமிழின் புனர்வாழ்விற்காய் உழைத்த இவர் சகல தட்பவெட்பங்களையும் தாங்கிக் கொண்டார். எனவேதான் இறுதி யாத்திரையில் பங்குகொண்ட தக்கவர்கள் தகவுரையும் புகழுரையும் வழங்க மூத்த ஒரு தலைவரின் முழுவாழ்வு முற்றுப் பெறுற்றிருக்கிறது!

காசறு துணைவனும் கணவனை இழந்த மாசறு மனைவிளக்கின் மஞ்சள் அழிந்தது; மங்களம் அகன்றது. பர்த்தாவை இழந்தவர், 'பத்மா' மட்டுமல்ல. சகலதையும் இழந்த நிலைக்கு அவள் 'சக்களத்தி' யும் ஆளாகிவிட்டிருக்கிறாள். குலமகளோடு கோப்பாய்ப் பெண்ணாளின் குங்குமத்தையும் காலனின் கரங்கள் துடைத்து விட்டிருக்கின்றன. ஒரு கோதை அழுகிறாள்; கூடிக் 'கோவை' அழுகிறாள்; கூடத் தமிழ்ப்பாவை அழுகிறாள்.

அழுகையே அறியாத அமரருக்காக அழுதவர் அனேகர்; ஆழ்ந்த துயரில் வீழ்ந்தவர் அனந்தம். தனக்கும் தன் பிள்ளைகட்குமாக வாழாத கதிரவேற்பிள்ளைக்காய் அழவேண்டிய கடப்பாடு ஈழத்தாய் ஈன்று புறந்தந்த ஒவ்வொரு பிள்ளைக்குமே உண்டல்லவா!

**"மதராஸில் தோன்றித் தமிழ் நாட்டில் மாண்டாய்!**
**எது செய்ய வந்தாய் எனக் கேட்டுக் கத்துங்கள்'!"**

தமிழகத்து எழுச்சிப் பன் அண்ணா, அமரன் ஆன வேளையில் ஈழத்து உணர்ச்சிக் கவிஞர் கண்ணீரில் தொட்டு எழுதிய கவிதைவரிகள் இவை. அமரர் வன்னியரின் அடுத்துறுவோன் ஆகிய கதிரவேற்பிள்ளை அவர்களும் அன்னவர் போல் எண்ணிய முடிக்கின்ற திண்ணிய மனத்தவர்; செயல் மறவர்.

அவர் ஈழத்தமிழ் மண்ணில் சுத்தமான— சுகந்தமான — சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க ஆசைப்பட்டார்; அப்பணிக்கே தன்னை அர்ப்பணித்தார். அப்பணியிலேயே உடல், பொருளோடு ஈற்றில் ஆவியையும் ஈந்தவர் அவர்.

**"மதராஸில் தோன்றித் தமிழ் நாட்டில்**
**மாண்டவன் தமிழகத்து அண்ணன்**
**தனிநாடு கேட்டுத் தமிழ்நாட்டில் மாண்டவன் ஈழத்துச் சின்னண்ணன்"**

அவர் அறிவில் ஒரு தெளிந்த நீர்த்தேக்கமாக இருந்தவர், ஆழத்தில் அவர் ஆழி தான். ஆனால் அலையாட்டமோ ஆர்ப்பாட்டமோ இல்லாத சாந்த சமுத்திரம் அது. அறிவும் ஆணவமும் இணைபிரியா இரட்டைக் குழந்தைகள் என்பர். ஆனால் சகலகலா வல்லுநராக அன்னார் அமைதியும் சாந்தமும் உள்ளவராக ஆணவத்தின் சாயலே இல்லாதவராக வாழ்ந்தவர்.

சீரிய சிந்தனையாளரான இவர் வற்றாத ஜீவநதியோ இல்லையோ — வளம் குறையாத சிந்தனை ஊற்று என்பதை மறுக்க யாரும் மனமொப்பார். இந்தச் சிந்தனைச்சிற்பி 'ஒவ்வாக் கானத்து உயர் மரமல்ல'; 'ஊருணி நீராக' உவந்த பணி புரிந்தவர்.

**சட்டவாதி:** திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் சட்டத்தில் ஒரு மாமேதை என்று கூறின் அது உயர்வு நவிற்சியன்று. யாழ் குடாநாட்டில், சமகாலத்தில், குடியியற் சட்டத்தில் ஈடும் எடுப்புமற்ற ஒளிஞாயிறாக விளங்கியவர் இவர்தான் என்பதை விசயம் தெரிந்தவர்கள் — விபரம் புரிந்தவர்கள்

ஒப்புக்கொள்வர். பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இவர் இலங்கையின் இணையில்லாத தமிழ் இராணி வழக்குரைஞருக்கு எதிராக ஏற்பட்டு தன் வாதத்திறமையாலும் சட்டஞானத்தாலும் தன் வாதங்களை நிலை நிறுத்தி மூன்று வழக்குகளிலும் வெற்றி கொண்டதை அவரின் சட்டத் தொழிலுக்கு இளவலாக இருந்த நான் அருகிலிருந்து அவதானித்திருக்கிறேன்.

ஏழைகள் என்றால் இலவசமாகப் பேசும் இவர், வசதிபடைத்தவர்களிடமிருந்து ஒரு குறித்த தொகைக்கு மேல் அறவிடமாட்டார். சில கற்றுக்குட்டிகளே இவரை விட பன்மடங்கு கறக்க நான் கண்டதுண்டு. இது பற்றி சுட்டிக் காட்டுபவர்களுக்கு அடக்க முடன் அமரர் அளித்த பதில்; "என் அறிவுக்கு இதுதான்விலை!"

வாங்குவதில் வைத்திருந்த வரையறையை இவர் வாரி வழங்குவதில் வைத்ததே இல்லை. இயக்கத்து இளைஞர்கள் தேவை ஏற்படுகையில் எல்லாம் தேடிப் போன நல்லாத்மாக்களில் இவர் முதல்வர். அகில அரங்குக்கு இலங்கைப் பிரச்சினையை இட்டு இவர் செய்த செலவுகளை இயக்கத் தலைவர்கள் பலருமே தெரிந்திருக்க நியாயம் இல்லை. வந்தாரை எல்லாம் வரவேற்று வாய்க்கிதமாய் (சைவ) உணவு தந்ததோடு, அடையாத கதவிருக்கும் சந்திதானமாக அமைந்தது அவரில்லம் — இத்தூயபணிக்குத் தோள் கொடுத்தவர் அவர் துணைவியார். விருந்தினர் விடுதிகளில் தங்கிய வெளிநாட்டுப் பிரமுகர்கள் பத்திரிகையாளர்கட்கென அவர் ஆயிரக் கணக்கில் செலவிட்டதை நான் நன்கறிவேன்.

தீண்டாமை: பிறப்பால் யாழ்ப்பாணத்திலேயே பேரோடு வாழும் ஒரு பெருங்குடியில் பூத்தவர் இவர் என்று சாதிவாதிகள் கூறுவர். சமதர்மவாதியான அவரே வடக்கிலே வேரும் விழுதும் விட்டு வியாபிக்க விழைந்த சாரியைச் சாகடிக்கவும் அதற்கு சமாதி கட்டவும் முன்னின்று முனைந்தவர். அடையாமல் இருக்க வேண்டிய அல்லது அனைவர்க்கும் அகலத் திறக்க வேண்டிய ஆலயக் கதவுகள் அரிசனர்க்குத் திறக்கவில்லை. நீதியிலார் பூட்டிடவே நேரில்லாத் தெய்வங்களே சிறை கிடந்தார்கள். சாதி எனும் வாதத்தால் கால் முடங்கத் தமிழ் தாய் சாய்ந்து வீழ்ந்தாள்.

சாத்வீக வழிகளும் சாமபேததான முறைகளும் தோற்கவே இந்த கர்மவீரர் சாதிவெறியரை நீதிமன்றத்தில் சந்திக்கத் தயங்கவில்லை. நீதி நிலைக்கவும், சாதியைத் தொலைக்கவும், சமூகக்குறைபாடுகளை ஒழிக்கவும் இந்தச் சட்டமேதை பல வழக்குகளில் இலவசமாகவே ஏற்பட்டார். பலத்த எதிர்ப்பு பயமுறுத்தல்களைக் கண்டு கலங்காது சாதிச் சமரில் ஈடுபட்ட இவருக்கு காற்றோடு தீ கலந்தாற் போல்—காந்திஜியோடு நேருஜி இணைந்தாற் போல் கைகொடுத்தவர் திரு. சு. நடராசா (முன்னாள் செனட்டர்) அவர்கள். கதிரவேற்பிள்ளை அவர்களின் கனங்காத்திரமான வாதங்களை ஏற்க மறுத்து இலண்டன் கோமறைக் கழகம் வரை சென்றவர்கள் தோல்வியையே தழுவினர். தண்டமே தமிழனுக்குத் தகுந்த வழி என்ற அடங்காத் தமிழரே தண்டத்தைச் செலுத்தி அடங்கவேண்டியவரானர்;

அண்மையிலும் ஈழநாடு பத்திரிகை வாயிலாக அனைவருக்கும் திறக்கப்படாத ஆலயங்களது பரிபாலர்களுக்கு கால அவகாசமும் கடும் எச்சரிக்கையும் தந்த அன்னார், அகால மரணம் கண்டது தாழ்த்தப்பட்ட சமுதாயங்கட்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்திற்கே தாளாத இழப்பெனலாம்.

**பங்காளர்:** "இனவிடுதலைப் போராட்டம் என்பது விளையாட்டுப் போட்டி அல்ல. அதில் பார்வையாளர்கள் இருக்கக் கூடாது" என்று அடிக்கடி கூறும் அவர் இறுதிவரையில் பங்காளராகவே இருந்தார். பலனை எதிர்பாராது தன் பங்களிப்பை இறுதி மூச்சு இருக்கின்ற வரை ஈந்தார். தன் உடலுழைப்பையும் பொருளுழைப்பையும் 'இலன்' என்ற எவ்வம் உரையாது ஈந்த அவர் ஈற்றில் ஆவியையும் தமிழன்னையின் தாள்மலர்களில் தந்து போந்துள்ளார்.

இனவிடுதலைக்கு வாய்ந்த இணையில்லாத 'வழிகாட்டியை இழந்து விட்டோம். இன்னல் மலிந்த இனவிடுதலைப் பாதையில் சரியான திசையைத் தெளிவாகக் காட்டிநின்ற 'கை காட்டி மரம்' சரிந்துவிட்டிருக்கிறது. அடிமைத்தனம் என்ற காராக்கிரகத்தில் காரிருளில் வாழும் நாம் ஒளிக் 'சுதிரை'ப் பறிகொடுத்து திக்கற்று — திகைப்புற்று நிற்கிறோம்.

எம்மிடையே வாழ்ந்துகொண்டு எமக்காக எல்லாம் சிந்தித்த சிந்தனைச் செங்கதிர் இன்றில்லை. இனி எமக்காக நாமே சிந்தித்தாகவேண்டும். ஒவ்வொருவரும் சிந்திப்போம். மிதவாதப் போக்கினரோடு மிகவேக நோக்கினர் கூடிச் சிந்திக்கட்டும், மந்தையைவிட்டு விலகிய தனிவழிப் போக்கர்களும் மந்தையுள் மந்த நோக்குடன் இருப்பவர்களும் கூடிச் சிந்திக்கட்டும்.

ஒன்றுபட்ட, சிந்தையோடுகூடிய செயற்பாடு இல்லையேல் செந்தமிழீழம் இல்லை. இதை உணர்ந்து, செயற்படுவதன்மூலம் அன்னாரின் ஆத்மசாந்திக்கு உழைப்போம்.

# மனம்விட்டு சில வார்த்தைகள்

"ஆரி"

சுதந்திர உணர்வு கொண்ட விடுதலைப் போராளிகளின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்துவிட்ட பெயர் —பொபிசாண்ட்ஸ்.

'பயங்கரவாதமே விடுதலைப்போரின் பேராயுதம்' என்ற தீவிரவாதத்தின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த பொபி, ஈற்றில் அஹிம்சைப் பேரொலிக்கே தன்னுயிரை ஈந்துவிட்ட செயல் வரலாறு என்றும் மறக்க முடியாதது.

பொபி சாண்ட்ஸை தொடர்ந்து பிரான்ஸிஸ் ஹூக்ஸ், றேமண்ட்மாக் றீஸ், பட்ஸி ஒகரா ஆகியோரும் உண்ணாவிரதப் போராட்டம் என்ற பெருந்'தீ'க்கு தங்களை இரையாக்கி மடிந்துவிட்டனர். ஐரிஷ் சிறைச்சாலைகளில் கொளுந்துவிட்டு பரவி வரும் இந்த 'தீ' இன்னும் எத்தனை விடுதலை மலர்களை கருக்கப் போகிறதோ?

ஜனநாயக பாரம்பரியத்தில் ஊறித் திளைத்த—பாராளுமன்ற அரிச்சுவட்டையே உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமைவாய்ந்த ஒரு நாட்டின் பிரதமர் அதுவும் மெல்லிதயம் படைத்த பெண் பிரதமரான திருமதி தட்ச்சர் பல உயிர்களை பலி கொள்ளும் 'காட்டேரி'யாக மாறியிருப்பது அவருக்கும் அவரது நாட்டுக்கும் சிறுமையையே ஏற்படுத்தியிருக்கிறது.

பொபிசாண்ட்ஸ் ஒரு சாதாரண கெரில்லா வீரர் மட்டுமல்ல—'பெர்மானு சவுத்திரொன்' தொகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருங்கூட. ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை அங்கீகரிக்க மறுத்து அத்தொகுதி மக்களின் இறைமையை மறுதலித்த செயல், பிரிட்டனின் பாரம்பரிய வரலாற்றில் அழித்தொழிக்க முடியாத கறைபடிந்த ஒரு கரும்புள்ளியாகவே இருந்து வரும்.

வட அயர்லாந்து மக்களின் விடுதலை வேட்கையை மழுங்கடிக்கும் முகமாக பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் திட்டமிட்ட குடியேற்றம் மூலம் வட அயர்லாந்துப் பகுதிகளில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்த கத்தோலிக்கர்களை இன்று சிறுபான்மையினராக்கி விட்டனர். இருந்தும் 'விடுதலை உணர்வு' பெட்டிப் பாம்பாக அங்கு அடங்கி ஒடுங்கி விடவில்லை. சீறிப்பாயும் கொடிய பாம்பாகவே படம் எடுத்து ஆடுகிறது.

இங்கும் ஐ. தே. க. ஏகாதிபத்திய வாதிகள் பாரம்பரிய தமிழ் பிரதேசங்களை மெல்ல மெல்ல 'விழுங்கி' வருகிறார்கள்.

பேச்சை விடுத்து செயலில் ஈடுபடுவோமாக!

---

## பண்டிதர் கா. பொ. விவகாரம்

சிங்கள காவற்றுறைவெறியர் இட்ட வேள்வித்தீயிலேயே வெந்து கொண்டிருக்கிறார்கள் தமிழ்மக்கள். இவ்வேளையில் பண்டிதர் இரத்தினம் அவர்களுடன் வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வது பொருத்தமல்ல; எனவே, சென்ற இதழில் (33ம் பக்கம்) குறித்த விபரங்களை அடுத்த இதழில் தருகிறோம்—

-ஆசிரியர்.

---

## நேர்முகப் பரீட்சை.

பிரபல காகிதத் தொழிற்சாலை அது. வைக்கோல் நிலையத்தில் பணிபுரிவதற்கான மேற்பார்வையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை.

"இந்தியாவின் பிரதமர் யார்?"

"ஜவஹர்லால் நேரு!"

"ஹஹ்ஹஹ்ஹா—ஹாஹா! ஹோஹோ ஹா!"

"ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? இந்திரா காந்தி என்று நான் சொல்லியிருந்தால் மட்டும் உடனே இந்த வேலையை தூக்கித் தந்து விடப்போகிறீர்களா?"

சிரிப்பு 'பட்'டென்று நின்றது.

"வைக்கோல் நிலையத்தில் பணி புரிவதானால் வைக்கோலைப் பற்றி கேளுங்கள். நிறுப்பதைப்பற்றிக் கேளுங்கள். வைக்கோல் பாதுகாப்பைப்பற்றிக் கேளுங்கள், வைக்கோல் பயனைப்பற்றிக் கேளுங்கள். உங்களுக்கு இவைகளைப் பற்றி எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை என்று நினைக்கிறேன். ஆனால் எங்கள் பரம்பரையே வேளாண்மையில் வளர்ந்தது......"

நேர்முகப் பரீட்சைப் 'பானல்' அசந்தது. பதில் சொல்லியவருக்கு நியமனம் கிடைத்ததா என்பது தெரியவில்லை—இலங்கை இல்லாதிருந்தால், கிடைத்திருக்கலாம்.

'மணி'

# பதில்கள்

## கரிகாலன்

கே: 'சுடர்' ஆசிரியர், மல்லிகை ஆசிரியர்— இவர்களுக்கிடையில் ஒற்றுமை — வேற்றுமை என்ன?

ப: இரண்டு இதழ்களும் எமது மண்ணின் மலர்களே. எனக்கு இந்த ஈடுபாடு வெறும் இலக்கியப் பணி மட்டுமே. நண்பர் ஜீவாவுக்கோ இது ஓர் இலட்சியவெறி.

**?. சவீரசிங்கம்,**
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

கே: தமிழ் இலக்கியத்துறையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய படைப்பாளி யார்?

ப: நிச்சயமாக ஜெயகாந்தன்தான். வர்க்கப் போராளி வர்த்தகச் சந்தையிலே விலை போய்விட்டாரே என்பதே எனது கவலை.

கே: தமிழ்த் திரையுலகில் திருப்புமுனையை ஏற்படுத்திய படைப்பாளி யார்?

ப: படைப்பாளியென்றால் கே. பாலச்சந்தர்தான். நடிகர்களை சிருஷ்டிகர்த்தாக்கள் என்று கொள்ள முடியவில்லை. அவர்கள் வெறும் சிருஷ்டிகளே. பாரதிராஜா, பாக்கியராஜ், மகேந்திரன்— இத்தியாதி பேர்வழிகள் பாலச்சந்தர் திறந்த புதிய பாதையில் முன்னேறும் பயணிகளே.

கே; நடிகர்களில் தங்களுக்கு யாரைப் பிடிக்கும்?

ப: கலைத்துறையில் நானொரு பழமைவிரும்பி. பல்லாண்டுகளுக்குப் பின் மீண்டும் வந்த தியாகராஜபாகவதரின் ஹரிதாஸ், திருநீலகண்டர், அம்பிகாபதி ஆகிய திரைப் படங்களை (சில்லாண்டுகளுக்கு முன்) பார்த்தேன். பாபநாசம் சிவனின் பாடல்களை ஏழிசை மன்னர் பாடி நடிப்பதைப் பார்த்தால் அது ஒரு திவ்வியமான அனுபவம்.

**தி. நடராசா,**
சுந்தர்மடம், யாழ்ப்பாணம்.

கே: கொழும்பில் அச்சாகும் 'சுடர்' இதழை தமிழ்ஈழ மண்ணின் மலர் என்று கூறியிருக்கிறீர்களே (சித்திரை இதழில்) இது சரியா?

ப: சிறீ லங்காவின் கரன்சி நோட்டுக்களும் தபால் முத்திரைகளும் சுவிட்சிலாந்திலும், இங்கிலாந்திலும், பிரான்சிலும், யப்பானிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன- இவை அந்த நாடுகளின் நோட்டுக்கள்- முத்திரைகள் என்று பொருளா?

**அ. பாஸ்கரன்,**
காலி வீதி, கொழும்பு—4,

கே: தலைவர் அமிர்தலிங்கம் அமரர் கதிரவேற்பிள்ளை பற்றிப் பேசும்போது 'சின்னண்ணை' என்று குறிப்பிட்டாரே. இருவரில் இளையவர் யார்?

ப. வயதில் இளையவர் திரு. அமிர்தலிங்கமே . கட்சி வட்டாரத்தில் அன்னாரை வயதில் மூத்தோரும் சின்னண்ணை என்றே அழைப்பதுண்டு.

கே: தர்மிஷ்டரின் ஆட்சியில் தமிழ் இளைஞர்கள் கைதாகிசித்திரவதை செய்யப்படுகிறார்களே?

ப: தர்மம் மரணம் கச்சாமி!

**பா. மகேந்திரன்,**
ஏழாலை மேற்கு சுன்னாகம்.

கே. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களைப்பற்றி 'சுடரில்' எதுவும் வெளிவருவதில்லையே ஏன்?

ப: நாடாளுமன்ற முனையிலும், பிரச்சாரமுனையிலும் அமைப்பு முனையிலும் சிவர் அவர்கள் அமிருக்கு ஈடு கொடுத்துப் பணியாற்றிவருகிறார். இயக்கத்தை இழுத்துச் செல்வதில் இரட்டை மாட்டு வண்டியாகவும் எதிரிகளைச் சந்திப்பதில் இரட்டைக் குழல் துப்பாக்கியாகவும் இந்தச்சோடி உழைக்கிறது. இன்னொரு முனையில் சிவா தன்னந்தனியனாக மாடாக உழைக்கிறார். நீதிமன்ற முனையில் குற்றஞ்சாட்டப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள இளைஞர்களை மீட்பதற்கு இவர் சலிக்காது சமர்புரிகிறார். (நினைவில் நிற்பவற்றை மட்டும் கூறுகிறேன்) உடுவில் கொள்ளை வழக்கு, 'அவ்ரோ' விமான வெடிகுண்டு வழக்கு, செங்கலடி கொள்ளை வழக்கு, (இரண்டு தடவை நடைபெற்றன. இரண்டாம் தடவை திரு. சம்பந்தனும் பங்களித்தார்.) காசிஆனந்தன் வழக்கு கனகரத்தினம் கொலை முயற்சி வழக்கு, புலோலி கொள்ளை வழக்கு, சுன்னாகம் வெடிகுண்டு வழக்கு, பொலிஸ் கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கு இத்தியாதி எத்தனையோ. இன்னும் 20 வழக்குகள் வரை கையிருப்பில் உள்ளன. அரசியல் கருத்துக்கள் எப்படியிருப்பினும், இந்த விடயத்தில் தமிழ் இளைஞர்களுக்கு நிறைய நன்றிக்கடன் உண்டு.

கே திரு. அமிர்தலிங்கம் திரு. சிவசிதம்பரம் இவர்களுக்குப் பிறகு........?

ப: ஏன், அவர்களுக்கு இப்போ என்னயா ஆச்சு? ஆரோக்கியத்துடன் தானே இருக்கிறார்கள். ஆருடத்திற்கு அத்தனை அவசரமோ?

**பி. மரியதாசன், நாவாந்துறை**
யாழ்ப்பாணம்

கே: காதலித்துக் கலியாணம் செய்வது நல்லதா? அல்

லது கல்யாணம் செய்த பின் காதலிப்பது நல்லதா?

**ப:** எப்படியாவது செய்யுங்கள் இரண்டையும் செய்துவிட்டு மூன்றுவதாகச் செய்வதற்கு ஏதாவது உருப்படியாக உண்டா என்று பாருங்கள்......

**அ. துயாபரி**, கொக்குவில் மேற்கு

**கே:** ஸ்ரீலங்கா கட்சிக்கும் கூட்டணிக்கும் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையின் காரணம் என்ன?

**ப:** அடிப்படை நோக்கிலேயே வேறுபாடுள்ள சீனுவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் உறவுக்கு காரணம் எதுவோ அது தான். எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்பது மாவோவின் உத்திகளில் ஒன்று.

**கே:** கவிஞர் காசி ஆனந்தன் தான் தமிழ் இளைஞர்களுக்கு தலைவர் என்று இராஜன்செல்வநாயகம் கூறியிருக்கிறுரே?

**ப:** வசிட்டர் வாயால் மகரிஷி! கவிஞர் பாக்கியமே பாக்கியம்!

**மி. அருள்மொழிராஜா,**
நிலாவெளி - 3

**கே:** அண்ணு கரிகாலரே! 'சுதந்திரனும்' 'உதயசூரியனும்' ஒன்றையொன்று சாடிக்கொண்டிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** சாடிக்கேற்ற மூடி என்று சந்தோஷப்படவா? தமிழன் சக்தி இப்படி விரயமாவதை நினைத்தால் வேதனை. யாரொடு நோகேன்? யார்க்கு எடுத்துரைக்கேன்?

**கே:** மாவட்ட அ. சபைத் தேர்தலில் த. வி. கூட்டணியின் வெற்றி தோல்விகள் எதற்கு ஒப்பாகும்?

**ப:** அபிவிருத்தியை அப்பாலே வையுங்கள்: த. வி. கூட்டணியின் வெற்றி - தோல்வி தமிழினத்தின் வெற்றி தோல்விகள்-பகிஷ்கரிப்பு என்பது தேர்வுக்காக இரவுதூங்காமல் படித்த நன்மாணுக்கன் பரீட்சை மண்டபத்தில் படுத்துறங்குவது போல.

**கே:** குறும்புத்தனம், விஷமத்தனம்—இரண்டிற்கும் விளக்கம் கூறுங்கள் பார்க்கலாம்.

**ப:** தங்கள் முதலாவது கேள்வி குறும்புத்தனம். அதனைக் கொண்டு, நீங்கள் சிண்டு முடியப் பார்க்கிறீர்கள் என்று நான் கூறுவது விஷமத்தனம்.

**'பாலமேனு'**
மண்டைதீவு-1

**கே.** தமிழர்களுக்கு பல கொடுமைகளை சிங்களவர் செய்து வந்தாலும் உள்ளூர எமக்குப் பயப்படுகின்றனர் எனச் சிலர் கூறுகின்றனர். உங்கள் கருத்தென்ன?

**ப:** பயமல்ல, தாழ்வுமனப்பான்மையிலே பூத்த பொருமை.

**கே:** பாலர்வகுப்பு மாணவர்களைப்போல பாராளுமன்றத்தில் உறுப்பினர் வீண்வாதம் செய்கின்றுர்களே?

**ப:** பாலர்வகுப்பு மாணவர்கள் (பாலபோதினியாசவது) படித்தவர்கள். சூதுவாது அற்றவர்கள். அவர்களைப் போய் இவர்களுடன் ஒப்பிடலாமா? அறிந்தால், அவமானத்தால் கேவிக் கேவி அழமாட்டார்களா?

**கனக. பிரதீபன்,**
கொக்குவில்மேற்கு.

**கே:** மாவட்ட அபிவிருத்தி சபை மாயமான் என்று கூறிய பண்டிதர் ரத்தினம், தேர்தல் கூட்டங்களில் அது 'தமிழ் ஈழத்தின் படி' என்று கூறுகிறுரே. எது சரி?

**ப:** அங்ஙனம் கூறியிருந்தால், இரண்டுமே தவறு.

**கே.** திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஐ. தே. கட்சி வென்றுல்?

**ப:** கோணேஸ்வரப் பெருமானே! அந்தக் கொடூரமான பயங்கர நிகழ்வை இம்முறையும் பின்போட்டு விடப்பா.

**ந. சிவகடாட்சம்**, மெசஞ்சர் வீதி
கொழும்பு 12.

**கே:** அமைச்சர் இராசதுரை வெளிநாட்டுப் பயணம் செய்வதில்லையா? (தமிழ் நாட்டுக்குப் போவதைக் கேட்கவில்லை).

---

**பொலிஸ் அதிகாரி:** அடேய்! அவனை நீ அடித்ததற்கு அபராதமாக ஐம்பது ரூபா கட்டு.

**குற்றவாளி:** ஐயா! இன்னுமொருமுறை அவனுக்கு அடிக்க உத்தரவு தாருங்கள் நூறு ரூபா கட்டுகிறேன்.

* * *

**மனைவி:** ஐயோ! என் மகனுக்கு ஏன் இப்படி அடிக்கிறீங்க. போதும் விட்டுவிடுங்க.

**கணவன்:** நீ பேசாதேடி. நாளை பரீட்சை றிசல்ட். நான் நாளைக்கு வீட்டில் நிற்க மாட்டேன்.

எழுதியவர்- செல்வி தே. இராக்கினிதேவி
உடுவில்.

கவனத்தை ஈர்க்காதவர், நட்டநடுநிசியில் நலிந்துபோய் வந்திருக்கிறார். பாவம், ஆளையே அடையாளம் தெரியவில்லை.

**வே. லோகேஸ்வரன்**
கோப்பாய் வடக்கு.

# வாசகர் கவனத்துக்கு

இடவசதியின்மையால் இம்மாதம் 'இலக்கியப்பிரச்சினைகள்,' கட்டுரைத்தொடர் இடம்பெறவில்லை. அடுத்த மாதம் இது நிறைவுறும்.

**ப.** ஏன் ஐரிஷ் பிரச்சினையைத் தீர்க்கவா? எங்காவது ஐயர் பிரச்சினையென்றால்தான் அவரை அனுப்புவார்கள்.

**கே.** காசி ஆனந்தன் எங்கே? ஆளையே காணோமே

**ப.** இப்போதான் சற்று சுறுசுறுப்புடன் மா. அ. சபைப் பிரச்சாரவேலைகளில் ஈடுபட்டுள்ளார். கவிஞரைக் காணாதது கவலையல்ல. அவரது கவிதைகளைக் காணவில்லை என்பதே கவலை. காசியிடம் இல்லாத துடிப்பு அவர் கவிதைகளில் உண்டு.

**கே:** தூங்குகின்ற தமிழனுக்கு ஓங்கி மார்பில் குத்தடா! ஏங்கியழும் அன்னை விலங்கொடித்தெறிய மறந்துமே — தூங்குகின்ற தமிழனுக்கு ஓங்கி மார்பில் குத்தடா! இப்படியான கவிதைகளை சுடரில் பிரசுரிப்பீர்களா?

**ப:** இதோ பிரசுரித்தேன். தயவுசெய்து கத்தியை கீழே போடு தம்பி. ப...ய...ம்...மா... இருக்கு.

**எம். மகாலிங்கம்,**
டெமேரியா, பசறை.

**கே:** சுடர்வட்ட நண்பர்கள் கடிதம் அனுப்பினால் பதில் அனுப்புவதில்லை. அப்படிப் பட்டவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** தவறுதான், மாபெரும் தவறு. மன்னிக்க முடியாத தவறு. ஒரு சந்தேகம்! நண்பர்களா நண்பிகளா?

**செல்வி. ஜெய சபா, மல்லாகம்.**

**கே:** தமிழ் மக்களின் மூலமூர்த்தி யார்? உற்சவமூர்த்தி யார்?

**ப:** சிண்டுமுடிப்பா? சிவலிங்கம் என்று சொல்வோமே. எதற்குவீண் வம்பு?

## மணிக்கதை மணிக்கை

மணிக்கதைப் பரிசுப் பணத்தை அவ்வப்போது அன்பளிப்பாக சுரந்துவிட்டு அனாமதேயங்களாக கரந்து நிற்கும் வழக்கறிஞர்களான என் நண்பர்களுக்கு நன்றி-

—**ஆசிரியர்**

**கே:** சோஷலிச முன்னணிச் சூரியர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**ப:** உச்சிப் பொழுதில் உயர் வானத்திலிருந்தே ஊராரின்

**கே:** தன் இலட்சியத்திற்காக உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்த பொபி சாண்ட்ஸ் அவர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

**ப:** பிரித்தானிய மனச்சாட்சியின் மீது பீரங்கித் தாக்குதல் நடாத்தியிருக்கிறார். விடுதலைப் போராளிக்கு வேண்டிய பரிமாணங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. வீர சொர்க்கம் என்பது இன்று புராண இதிகாசமல்ல—புதிய வரலாறு.

**கே:** ஆசியன் கழக (நாடுகள்) அமைப்பில் இலங்கை சேர்ந்து கொள்வதற்கு தகுதி கிடையாதென்று சிங்கப்பூர் துணைப்பிரதமர் திரு. சி. ராஜரத்தினம் கூறியிருக்கிறாரே?

**ப:** சிறீலங்காவை இன்று சேர்த்தால், அதே அணியில் சேர்வதற்கு தமிழ் ஈழம் நாளை மறுக்கலாம் என்ற அச்சம் காரணமாயிருக்குமோ?

**கே:** மாவட்ட அ. சபையில் ஐ. தே. கட்சி எதிர்க்கட்சியாக வந்தாலும், அதன் சொற்படிதான் அபிவிருத்திகள் நடைபெறும் என்று அமைச்சர் தேவநாயகம் கூறிய பின்பும் அபிவிருத்தி சபைத் தேர்தலில் த. வி. கூட்டணி போட்டியிட வேண்டுமா?

**ப:** சவாலே சமாளி!

**அட்டைப்படக் கவிதை**

## அன்னத்தின் கன்னம்!

மூங்கிலைப் போல் பொன்மேனி
முத்துப் போல் பல்வரிசை,
பாங்கினிலே அவள் அன்னம்!
பட்டுப் போல் தேன்கன்னம்!

—'**கானூர்க் கவிஞன்**'—



# நெஞ்சில் பூத்த கற்பு

எல். முத்துகுணரத்தினம்

வழ வழப்பான அந்தத் தரையிலே 'ஸ்ரெச்சர்' வண்டியை இருவர் தள்ளிக்கொண்டு வந்தார்கள். அதன்பின்னுல் நர்ஸ் ஒருத்தியின் பதட்டத்துடன் கூடிய துரிதநடை. அந்த "நர்ஸிங் கோமின்" வெள்ளைச் சுவர்களிலே அழகிய குழந்தைகளின் வண்ணப்படங்கள். ஒளி படைத்த கண்ணினுல் உலகைப் பார்க்கும் 'கிளாஸ்கோ' குழந்தைகளின் கொழு கொழுத்த மேனிகள், படங்களில் சிறைபட்டுக் கிடந்தன. 'மிக்கி மவுஸின்' கார்ட்டூன்களோடு கூடிய குடும்பக் கட்டுப்பாட்டுச் சுலோகங்கள்.

ராஜியின் உடல் ஸ்ரெச்சரில் துவண்டு கிடந்தது.

அவளின் கண்கள் அந்தக் கொழு கொழுத்த குழந்தைகளைப் பார்த்தவாறே மயங்கிக் கொண்டிருந்தன. நர்ஸின் பின்னுல் ரவி கலக்கத்துடனும் ஏக்கத்துடனும் நடந்து வருகிருன். அவனின் கண்களில் பரிவையும், ஆதரவையும் அவள் கண்கள் தேடுகின்றன. தேடும் அவளின் கண் பார்வைக்கு இடையில் நர்ஸின் உருவம் ரவியை, அவளிடமிருந்து மறைக்கின்றது.

* * * * *

யுகயுகங்களுக்கு முன்னரே இருவரும் இணைக்கப்பட்டு விட்டது போன்ற உணர்வுகள். ஆனுல் ரவியும் ராஜியும், எதிர் பார்த்த கனவுகள் கிடைக்காது, சிறிது சிறிதாக ஏமாற்றப்பட்டுக் கடைசியில் ஏமாற்றமே பெரிதாகி, அதன் விளிம்பில் தள்ளப்பட்டு, விரக்தி அடைந்தபொழுது, ஒருவருக்கொருவர் ஆறுதலாக உணர்வுகளோடு ஒன்றினுர்கள். ராஜியின் ஆத்மாவின் துடிப்புகளை அவன் அறிந்த பொழுது, ரவியின்இதயத்துஏக்கங்களை இவள் உணர்ந்த பொழுது, உணர்வுகளிலே பரிவும், அன்பும் இழையோடி நெருங்கினுர்கள்.

"நான் தானுங்க பாவி. ஐயோ காய்க்காத மரமாகி விட்டேனே. உங்களுக்கு 'அப்பா' என்கிற பெருமையைக் கொடுக்கவில்லையே இன்னும் நான்"

ஐந்து வருடங்களின் தாம்பத்தியப் பிணைப்பிலே, அவர்களின் அன்புக்குச் சாட்சியாக எதையும் பெருதபொழுது, ராஜியின் மடியிலே மழலையின் அழுகுரல் கேட்காதபொழுது, அவர்களுக்கு உலகமே வெறுமையாகத் தெரிந்தது. ஆனுல் அந்த உலகத்தின் பார்வைகளுக்குத்தான் எவ்வளவு கூர்மை?

பார்வைகளாலேயே அவர்களின் உடலைச் சல்லடைக் கண்களாக்கி அவளின் பெண்மையையும், அவனின் ஆண்மையையும் சந்தேகித்த பொழுது எப்படிக் கூசிப் பாய்விட்டார்கள்?

"ராஜி, ஏன் இப்ப நாங்க எதிலே குறைஞ்சு போய்விட்டோம்? ஐஞ்சு வருஷம் ஒரு வாழ்வா? ஆறுதலாகப் பெத்துட்டால் போச்சு. டேக் இற்ஈஸி."

"இல்லைங்க எல்லோரும் மலடி மலடி என்று சொல்லாமல் பார்க்கிருர்களே. 'இன்னும் ஒண்டும் இல்லையா?' என்று அவர்கள் கேட்கிற பொழுது, அவர்கள் நெஞ்சுக்குள் ஒளிஞ்சிருக்கிற கேலிகள் என் கண்களுக்குத் தெரியுதே. என் நெஞ்சில் முள்ளாய் அது குத்துதுங்க. அவங்கட முகத்தில முழிக்கவும் வெக்கமாய் இருக்குதுங்க." என்று ராஜி விம்மியபொழுது ஒன்றும் சொல்லத் தோன்றுமல் ரவி அவளை நெஞ்சோடு அரவணைத்துக் கொண்டான்.

"ஓ. ராஜி, உலகத்துக்காகவா நாங்க வாழ்கிருேம்?"

அப்படி அவன் கேட்டாலும், ஒரு பெண்ணுகப் பிறந்தவளுக்கு இருக்கிற சந்தோஷம் தாய்மைதான் என்பது அவன் இருதயத்திலே கோடு காட்டியது. அந்த அவளின் தகுதி இழப்புக்கு தானும் ஒருவகையில் காரணமோ என்று நெஞ்சில் உணர்ந்தபொழுது துக்கமாகவும் இருந்தது.

"ராஜி, டியர், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு மாதிரியான குறை. 'வீட்டுக்கு வீடு வாசல்படி' போல்தான் குறைகளும். யாருக்குத்தான் துன்பங்கள் இல்லை? மனசில குறைகளையும் துன்பங்களையும் நினைச்சுக் கொண்டிருந்தோமென்றுல் வாழ்க்கையில் நிறைவே கிடைக்காது. ஆண்டவன் எமக்கொரு பேபியைத் தர்றபோது தரட்டும். இப்ப அதற்கேன் டியர் கவலைப்படுருய். கவலைப்பட்டு என்ன பயன்?"

குழந்தை வேண்டி அழுத

அவள் தானே ஒரு குழந்தை கட் தருவது?''

யாகி ரவியின் நெஞ்சில் விம்மியழுத பொழுது ஏதோ ஒரு ஆறுதலை அவளின் இயதம் பெற்றுக் கொண்டுதானிருந்தது.

"நாங்க எல்லாம் ஏனுங்க பிறந்தோம்? விரும்புவதற்குத் தகுதியிருந்தும், விரும்பியதைப் பெறாமல் ஏனுங்க வாழ்வு? காலையில மாமிகூட என்ரை மனசைப் புரிஞ்சுக்காம சொல்லுறா அவரவர் மனசுபடிதான் துக்கங்களும், சந்தோஷங்களும் என்று. ஏனுங்க நான் அவ்வளவு கெட்டவளா? ஆண்டவன் ஏனுங்க எனக்கு மட்டும் இப்படிஓரவஞ்சனை செய்கிறார்'' ராஜி விசும்பியபடியே கேட்டபொழுது ரவி தவித்துப் போய்விட்டான்.

"நோ. ராஜி. அப்படிச் சொல்லாதே. கடவுளின் ஓரவஞ்சனை இல்லை அது. அவரின் அன்பும், கருணையும் உன்மீது நிறைய விழுந்துள்ளதின் பிரதிபலிப்புத்தான் இது. கூ நோஸ் வி வில் ஹாவ் எ டிலேய்ட் பட் பெற்றர் சைல்ட்? உலகம் போற்றும் உத்தமனைப் பெறுவதற்குக் காத்திருந்துதான் பெற வேண்டுமோ?''

அவள் கண்களில் ஒளியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

அவனின் அந்தச் சொற்களிலேயே ஒருமகனைப் பெற்றுவிட்ட திருப்தியை அவள் அடைந்தாள்.

"ராஜி, இப்ப புதுசா ஒரு கைனுகோல ஜிஸ்ட் சாரதா நேர்சிங் கோமிற்கு மாற்றலாகி வந்திருக்காவாம். முதலில போய் மெடிக்கல் செக்கப் பண்ணுவோம், உந்தக் கவலைகளை விட்டுவிட்டு''

"எத்தனை தரம்தான் போறதுங்க? எனக்கு மனசே வெறுத்துப் போச்சு, சும்மா ஒவ்வொருவருக்கும் உடம்பைக் காட்டிக் காட்டி கண்ட மிச்சம் என்ன? எங்கள் இருவரின் உடலிலும் எந்தக் குறையுமில்லை என்று எத்தனை பேர்தான் செடிபிர்க்

---

**இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இக்கதையின் நாயகிபோன்று வாழ்வார்களா என்று யாராவது நம்ப முடியாது சிந்தித்தால் அவர்களுக்காக நான் அனுதாபப் படுகிறேன். "கடவுளைக் காணவில்லை'' அதற்காக என்றால் நம்பமுடியாது என்று சொல்பவர்கள் போன்றுதான் இவர்களும். சில சமயங்களில் நம்பிக்கைகள் எவ்வளவுதான் மூடத்தனமானவையாக இருந்தாலும் அவரவர் நெஞ்சில் அவை புனிதமானவை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். தனது தாயின் படத்தை, படந்தானே என்று காலால் மிதிக்கும் துணிவு எத்தனை பேரிடம் உண்டு? இது கூட ஆழ்ந்து சிந்தித்தால் மூடத்தனமானது தானே? ஆனால் இதில் உள்ள தூய்மை சற்றும் மாசுபடாதது! புனிதமானது அப்படி ஒரு புனிதமான நம்பிக்கையை மனதில் குடியிருத்திவிட்டவள்தான் இக்கதையில் நாயகி!**

எஸ். முத்துகுணரத்தினம்

---

"எத்தனையோ தடவை மெடிக்கல் செக் அப் செய்தது தான்...... அதற்காக...இவவின் ராசியையுந்தான் பார்ப்போமே?''

"பெண் டொக்டர்தானே''

"ஆமாம். டொக்டர் ரேவதி என்று பேர். நீதான் ஆண் டொக்டர் என்றால் வர மாட்டியே. ஆம்பிளை டொக்டர் என்றால்தான் உனக்கு அர்த்தம் இல்லாத பயமும் வெட்கமும் என்று நான் அறியாததா? இந்த இருபதாம் நூற்றாண்டிலும் உன்னைப்போல பெண் இருக்கிறாளே என்று நினைக்கையில்தான் அதிசயமா இருக்கு ராஜி.''

"இருபதாம் நூற்றாண்டு என்றால் என்னங்க? பெண் பெண்தானே''? அவள் சிரித்தவாறு அவனை நிமிர்ந்து பார்க்கிறாள்.

'இந்த மலர்ச்சிரிப்பு என்றுமே இவளிடம் இப்படியே இருக்கக் கூடாதா?'

அவன் நெஞ்சிலே பெருமூச்செறிந்தான்.

* * *

"லேபர் றூம்'' என்று எழுதப்பட்டிருந்த அந்த அறையின் தள்ளு கதவைத் திறந்தவாறு ராஜி படுத்திருந்த ஸ்ரெச்சரைத் தள்ளிக்கொண்டு நர்ஸ் அந்த அறைக்குள் நுழைகிறாள். ரவி பதட்டத்துடன் நிலை கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவனைப் போலவே வேறுசிலர், அங்கிருந்த இருக்கைகளில் இருப்பதும், எழுவதும், அங்கு வைக்கப்பட்டிருந்த சஞ்சிகைகளையும் பழைய பத்திரிகைகளையும் விரித்துப் பார்ப்பதுமாக, பரீட்சை முடிவை எதிர் பார்த்திருக்கும் மாணவர் போல் தவிப்போடு நிற்கிறார்கள்.

ஆயிற்று—

ஒன்று, இரண்டு, மூன்று. இன்னும் எத்தனை சிகரெட்டுகள் மிகுதி? கையில் சுட்ட சிகரெட்டை— ஜன்னலுக்கூடாகச் சுண்டி எறிந்தான் ரவி. வெளியே — தெருவில்—

"அவனவன் துன்பம் அவனவனுக்கு'' என்பதுபோல் மனித உயிர்களின் பிரதிநிதிகள் அலைபாயும் மனங்களோடு சாரிசாரியாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளே — காராக்கிரஹத்தில்—அந்த 'லேபர் றூமில்'— மனித உயிர்கள் சமுத்திரத்தோடு கலப்பதற்குத் தாம் வாழ்ந்த கூட்டை உடைத்துக் கொண்டு வெளிவரத்துடித்துக்

கொண்டிருந்தன.

* * *

நாட்கள் மொட்டுக்களாகி விரிந்து காலப்பிரபஞ்சத்தில் மறைந்து கொண்டிருந்தன. ராஜியில் எந்த மொட்டும் அரும்பு கட்டவுமில்லை, முகைய விழவுமில்லை. டொக்டர் ரேவதியிடம் மாதத்திற்கொருதரம் 'கொன்ஸல்டிங்' செய்ததுதான் மிச்சம். அவளோடு திருமணம் முடித்த தோழிகள் எல்லோரும் நண்டும் சிண்டுமாக மூன்று நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டபொழுது தான்மட்டும் தனித்து விட்டது போன்ற பிரமையில் தவித்துப் போய்விட்டாள், தோழிகள் தங்கள் குழந்தைகளின் குறும்புத்தனங்களையும், மழலைகளையும் சொல்லிப் பெருமைப்படும் பொழுது. அவளின் கரங்கள் அவளையறியாமல் அவளது அடிவயிற்றைத் தடவும். அங்கு உணர்ந்துவிட்ட வெறுமையை, நெஞ்சில் உணர்ந்தவளாய், "எனக்கு மட்டும் இல்லையா? எனக்கு மட்டும் இல்லையா?" என்று ஓலமிடும் நெஞ்சுக்குப் பதில் கூற முடியாது வாடி நிற்பாள்.

"என்ன ராஜி, இருளில் என்ன செய்கிறாய்? விளக்கு ஏற்றவும் நினைவு இல்லாமல் எங்கே போய் விட்டாய்?"

ரவி கல்லூரியில் இருந்து வந்து விட்டதை உணர்ந்தவளாய் 'ம்' என்று பெரு மூச்சோடு எழுந்து வந்து ஹாலின் விளக்குகளை ஏற்றினாள்.

விளக்கின் ஒளியில்—

அவள் கன்னத்தில் கோடிட்டு நின்ற கண்ணீர் சுவடுகள் அவன் கண்களுக்குத் தெரிந்தன.

"ராஜி, இந்த முறை நீ மறுப்புச் சொல்லக் கூடாது. சும்மா இதையே நினைச்சு, நினைச்சுக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காமல், டொக்டர் பரமேசுவரனைப் போய் சந்திப்போம். அவர் "போரின் றிட்டேன்ட்" மகப்பேறு மருத்துவத்தில் ஸ்பெஷலிஸ்டாம். அவரைக் 'கொன்ஸல்ட்' பண்ணியபின் குழந்தையில்லாத எத்தனையோ பேருக்கு குழந்தைகள் பிறந்திருக்குதாம். ஆம்பிளை டொக்டர் என்றால் என்ன? எங்க நோயை நாங்க சொல்கிறோம். அவர் மருந்தைத் தாறார். அவ்வளவு தானே? டோன்ட் பி ஸில்லி இன் யுவர் தோட்ஸ் நாளைக்கு காலை நாங்க அவரைச் சந்திப்போம். ஓ. கே."

ரவி சொல்லிவிட்டு, கையில் கொண்டுவந்த லெதர் பாக்கை மேசையில் வைத்துவிட்டு நாற்காலியில் சாய்கிறான்.

ராஜி சொல்லத் தெரிந்தும் சொல்ல முடியாத ஊமையாகி நின்றாள். கல்லூரியில் மாணவர்களோடு தொண்டை வறண்டு போக விரிவுரைகளை முடித்துவிட்டு வந்த அவனிடம் எப்படி மறுத்து எதிர்த்துப் பேசுவது?

"ஏனுங்க என்ரை மனசை புரியாமப் பேசுறீங்க?"

ஒரு நாள்—

'இலஸ்ரேட்டட் வீக்லி' சஞ்சிகையில் நிர்வாணமாய் புறமுதுகைக் காட்டிக்கொண்டு நின்ற சின்னஞ்சிறு பெண் குழந்தையின் விளம்பரப் படத்துக்கு 'ஷேம், ஷேம் பொம்பிளைப்பிள்ளை இப்படி இருக்க வெட்கமில்லை?' என்று அதற்கு ஆடை அணிந்திருப்பதுபோல் பென்சிலால் நிர்வாணத்தை மறைத்துக் கீறிப் படம் வரைந்து மனதில் ராஜி நிறைவு பெற்றது அவன் மனதில், அவள் அப்படிக் கேட்கையில், வெளிச்சம் காட்டி மறைகின்றது.

"டொக்டர் என்றால் போல அவர் பிற ஆண் இல்லையா? எப்படிங்க உடம்பைத் திறந்து காட்டி, குறைகளைப் பரிசோதிப்பதற்காக மெடிக்கல் செக்கப்புக்கு ஒத்துக் கொள்கிறது. நினைக்கவே என் மனசு ஒத்துக் கொள்ளாதுங்க. விவரம் தெரியாத வயசில, எப்படி உடம்பை மூடி மறைச்சுப் பெண்மையைப் பாதுகாக்கிறோம். அறிவை வளர்த்து விட்டு அந்தரங்கம் புனிதமானது, யாருக்கும் தெரியாதது என்றெல்லாம் உணர்ந்து கொண்டு, எப்படி இந்த உடம்பைக் காட்டச் சொல்றீங்க?"

"ராஜி" எதுவுமே சொல்ல முடியாது திகைத்து நின்றான் ரவி. எப்படி இவளுக்கு புரிய வைப்பது?

"பட், ராஜி அவர் ஒரு டொக்டர்— எ நோபிள் புரபெஷன்—டொக்டர் தொழில் புனிதமானது இல்லையா? அங்கே துர் எண்ணங்களுக்கே இடமில்லை. நோயாளி, வைத்தியன் என்ற ரீதியில்தானே நாம் போகிறோம்? நமக்கு வேண்டியது குழந்தை இல்லையா?"

"புனிதமான தொழிலாயிருக்கலாம்........ஆனால் அவர் முனிவர் இல்லையே. ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்ட ஆண்மனம்தானே?.. ......பிளீஸ் என்னை மன்னிச்சிடுங்க என்னாலே வரமுடியாது. ஆம்பிளை டொக்டரிடம் கொன்ஸல்ட் பண்ணி...அவர்களிடம் இந்த உடலைக் காட்டித்தான் குழந்தை பிறக்குமென்றால்.... எனக்கு அந்த குழந்தையே வேண்டாமுங்க. அப்படி ஒரு குழந்தை எனக்கு வேண்டாமுங்க."

எதை அவள் சொல்லக் கூடாதோ, அதை அவள் விம்மியபடியே 'குழந்தை வேண்டாமுங்க' என்று சொன்னபொழுது ரவி துடித்துப்போய் விட்டான்.

ராஜியா சொல்கிறாள்?

இரவும் பகலும் ஒரு குழந்தைக்காகத் துடித்து அழும் ராஜியா சொல்கிறாள் வேண்டாம் என்று? பிஞ்சுக் கால்களால் தன் நெஞ்சிலே குழந்தை உதைக்காதா? மார்பு நிறைய அதை அள்ளி அணைக்க மாட்டேனா? என்று நாளெல்லாம் கனவு காணும் ராஜியா சொல்கிறாள் குழந்தை வேண்டாம் என்று? மற்றவர்களின் சொல் அம்புகளுக்கும் கேலிக்கண்க

ளுக்கும் பயந்து நடுங்கும் ராஜியா சொல்கிறாள்?

ஹாலிலே திரும்பிய பக்கமெல்லாம் மூலைக்கு ஒன்றாக மாட்டப்பட்டிருந்த குழந்தைப் படங்கள் கைகொட்டிச் சிரிப்பது போல் அவனுக்குத் தெரிந்தன.

“க்கெக், க்கெக்கே...ப்பப்பா ...ப்பா”

ரவி எழுந்து சென்று ஜன்னல் மூலைக்கு அருகில் மாட்டியிருந்த ஒரு குழந்தையின் படத்தை ஆசையோடு தடவியபடி நின்றான்.

“என்னை மன்னிடுச்சிடுங்க. ப்ளீஸ்... உங்களுக்கு குழந்தையில இருக்கிற ஆசை எனக்கு மட்டும் இல்லையா? நீங்க சொன்னமாதிரி டொக்டர் ரேவதிகிட்ட போறன்தானே? பார்த்துக் கொண்டேயிருங்க, அவவின் ராசிக்கு எங்களுக்குக் குழந்தை பிறக்குதா இல்லையா என்று... நான் சொல்றேன் என்று கோபிக்காதீங்க...நீங்கதானே சொல்லுவீங்க... ‘நெஞ்சத்துப் புகா கற்பு’ அப்பிடி என்று. அது இலக்கியத்தில் மட்டும்தானா? மனையை விட்டுப் பெண்கள் வெளிவராத அந்தக் காலத்துக்கு மட்டும்தானா அது பொருந்தும்? ஆண்களின் நெஞ்சிலே......ஆடை அணிந்து வரும் பெண்ணே, அவர்களின் காமுகக் கண்களால் கற்பழிக்கப் படுகிறாள் என்றும், அப்படிக்கூட கற்பை இழக்காத உயர்குடிப் பெண்கள் வாழ்ந்த நாடு...பிற ஆணின் நெஞ்சில் கூட இச்சிக்கப்படாத கற்புதான் உயர்ந்தது என்றும் இலக்கியம் சொல்லுதே..... இவ்வளவும் ஏன்?......காந்தர்வர்களின் மீது கண்களால் காமுற்ற...அப்பிடி என்று சந்தேகிக்கப்பட்ட பரசுராமரின் அன்னைக்குத் தண்டனை என்றால் ...ஆம்பிளை டொக்டர் மட்டும் கண்களால் காமுற மாட்டாரா? அவர் மட்டும் அப்படி என்ன புனிதரா? மருத்துவிச்சிக்குத் தெரியாததையா பெரிய டாக்டர்மார் படிச்சுவிட்டு வந்தவர்கள்? என்றை இந்த நம்பிக்கைகள் புனிதமானவை. இதை உடைச்சிடாதீங்க ப்ளீஸ்.” என்று உள்ளம் உடைந்தது போன்று ராஜி அழுதாள்.

ரவிக்கு ஏதோ புரிந்தது போலிருந்தது.

பெண்மையின் சக்தி பரிபூரணமாகி உயர்ந்து நிற்பது போல் உணர்ந்தான்.

“ராஜி டியர் என்னை மன்னிச்சிடு. ஊரெல்லாம் பெண்கள் சுதந்திரமாய் திரியும் இந்த நாளில முன்பு போல வீட்டில தனிமையில் முடங்கிக்கிடவாமல் ஆண்களைப் போலவே வெளியில் சோஷல், லேடிஸ்கிளப், என்று சுற்றுபவர்களாய் மாறிவரும் இந்தச் சமுதாயத்தில், ஆண்களின் சிந்தனை போன்று, பெண்களின் சிந்தனைகளும், ஆண்மை உணர்வுடன் மாறி வரும் இந்நாளில் உன் மனசை என்னால் புரிஞ்சிக்கவே முடியவில்லை. என்னை மன்னித்துவிடு. நான் இனி உன்னை வற்புறுத்தவேயில்லை.”

இம்மாத பரிசுக் கதை

அன்று காலைதான்—

ஆபிரிக்க பழங்குடிகளின் வாழ்க்கை முறை குறித்து விளக்கும் பொழுது ‘ஆஸெண்டி’ இனத்தவரில் இருந்த மூட நம்பிக்கைகள் பற்றி, மாணவருடன் விவாதித்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

“நம்பிக்கைகள் எவ்வளவுதான் மூடத்தனமாக இருந்தாலும் அவரவர் நினைவுகளில் அவை புனிதமானவைதான்,” ரவி நினைத்தான். நாகரிகம் வளர்ந்து விட்டது என்று கருதும் எம்மிடம், ஒருவேளை தாலிச்சரடு தவறுதலாகத் தொலைந்துவிட்டால் உயிரையே இழந்து விட்டது போன்று எப்படித் துடித்துப் போய் விடுகிறோம்? தன்தாயின் படத்தை, படந்தானே என்று மிதிக்கும் துணிவு எத்தனை பேரிடம் உண்டு? இந்த நம்பிக்கைகளும் பார்க்கப்போனால் மூடத்தனமானவைதானே? என்றாலும் புனிதமானவை. ராஜியின் நம்பிக்கைகள் கூட புனிதமானவை என்றே தத்துவப் பாடங்கள் எடுக்கும் லெக்சரர் ரவிக்குப் புரிந்தது. ஆனால் புது அலையைச் சமூகத்தில் எழுப்புகிறாளே.

“ஆண் டாக்டர்களிடம் தமது அந்தரங்கங்களைக் காட்டும் பெண்கள் நெறி தவறியவர்களா?”

* * *

நிமிடத்திற்கொருதரம் வெண்புறுக்களாக நர்ஸ்கள் நடைபயின்று கொண்டிருந்தார்கள். பதட்டத்துடன் கூடிய அமைதி அந்த இடத்தில் நிலவிக் கொண்டிருந்தது. ரவி, குட்டிபோட்ட பூனையைப் போல் நடந்து களைத்து, இயலாமல் மூலையிலிருந்த விசிட்டர்ஸ் நாற்காலியில் போய் அமர்ந்தான். முன்னால் மேசையில் வைக்கப்பட்டிருந்த பழைய சஞ்சிகைகளை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினான். நதியோரத்தில் நிற்கும் மரத்திலிருந்து விழுந்த மலர் நதியின் நீரோட்டத்தில் இழுபட்டுச் செல்வதுபோல், மனம் ராஜியின் நினைவுஓட்டத்தில் இழுபட்டுச் செல்வதை ரவி உணர்ந்தான்.

ஏழு மாதங்களுக்கு முன் ஒருநாள்—

ராஜி படிக்கட்டில் அமர்ந்தவாறே, முற்றத்து மல்லிகைப் பூக்களை மாலையாகக் கோர்த்துக் கொண்டு நின்றதும், அவனை அடிக்கடி பார்த்து நாணிச் சிரித்தும், பின் மல்லிகைப் பூக்களை கைநிறைய

ஏந்தியவாறு அதில் முகம் புதைத்து, ''நான் மூன்று மாசமாய் முழுகாமல் இருக்கிறேனுங்க'' என்று சொன்ன அந்தக்கணம் வாழ்க்கையில் எத்தனை மகத்தானது? இதற்சுாகத்தான் காத்திருந்தோமா?

''ஓ, யூ பிறவுட் மம்மா.''

ராஜி அவன் கரங்களுக்குள், பூமாலையாகி நெகிழ்ந்து நின்றாள். இருவர் கண்களிலும், துளிர்ந்த கண்ணீர்த்துளிகளை ஒருவர் மாறி ஒருவர் துடைத்தது! ராஜியின் நெற்றிக்குங்குமம், அவன் இதழ்களைச் சிவப்பாக்கிய விந்தையைப் பார்த்து ராஜி கண்ணீருக்கிடையில் சிரித்தது!

ஓ. அந்தக் கணங்களுக்காக யுகம் யுகங்களாகக் காத்திருந்தால்தான் என்ன?

அப்புறம் வந்த நாட்கள் அர்த்தங்களோடு வந்தன. டொக்டர் ரேவதியை ராஜி வானளாவப் புகழ்ந்தாள். அவளின் ராசிதான் தான் தாய்மையுற்றது என்று திரும்பத் திரும்பச் சொன்னாள்.

ரவி மீண்டும் அந்தப் பக்கங்களைப் புரட்டினான்.

நினைவேகூட்டத்தில் ஒரு தடை போன்று, சஞ்சிகையில் இருந்த அந்தச் செய்தியைக் கண்ட கண்கள் மீண்டும் அதைத் தேடித் துருவிப் பார்த்தன.

—தமிழ்நாடு, தூத்துக்குடியில் சினிமா தியேட்டர் தீப்பற்றியது — நூற்றுக்கணக்கானோர் தீயில் கருகி மரணம்— பெண்கள் ஜீவமரணப் போராட்டம்— வெளியேறும் ஜன நெரிசலில் பெண்கள் அவதி —ஆடை அவிழ்ந்த நிர்வாண நிலையில் நாகம்மா வெளி வாசலை பிரயத்தனத்துடன் அடைகிறாள் — உள்ளே அகப்பட்டவர்களை எப்படிக் காப்பாற்றுவோம் என்று வெளியே ஏங்கும் விழிகள் — நாகம்மாவின் கண்களில் கூட்டத்தில் தன் அத்தானைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி — ஒருகணம் — ஒரேயொருகணம் — பெண்மை விழித்துக் கொண்டு விட்டது— நிர்வாணத்துடன் முன் நிற்பதா?— ''சீ...வெட்கமாயில்லை ...போ...உள்ளே...'' பெண்மையின் சீற்றம். அவள் வழி தெரியாது தடுமாறி, நிர்வாணத்தை மறைக்க உள்ளே மறைந்தாள். —அக்கினியில் அவள் குளித்தாள் நிரந்தரமாக—

நாகம்மா!

நாகம்மா ஆ!

நாகம்மா ...மா ...ஆ ..ஆ!

தீ நாக்குகளால் உடலைப் போர்த்துக் கொள்ளத்தான் அவள் உள்ளே சென்றாளா?

ரவிக்கு நெஞ்சில் ஏதோ அடைத்தது! பெண்மை பூஜிக்கப்பட வேண்டிய ஒன்று! ராஜியின் புனிதமான நம்பிக்கைகள், எத்தனை ரூபத்தில் எங்கெங்கு வியாபித்து இருக்கின்றன? இந்த மண்ணில் காலங்காலமாகப் பெண்மைக்கு வழங்கப்பட்டு வந்த தெய்வீக அந்தஸ்த்துக்கான அர்த்தங்கள் காலங்களைக் கடந்த நிலையிலும், நிரந்தரமான பந்தங்களோடு, கண்காணுதழலைகளிலும் மலர்ந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

''மிஸ்டர் ரவி சீக்கிரம் வாங்க''

ரவி பாய்ந்தோடினான் அந்தக் கதவுக்கு. கதவை மறைத்துக் கொண்டு நர்ஸ்!

''உங்க மனைவி பிரசவ வேதனையில் துடிக்கிறா. அப்படி இருந்தும் டொக்டர் ரேவதிதான் வரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறா. ஹவுஸ் சார்ஜனாக இருக்கும் டொக்டர் கந்தசாமியை உதவி செய்யவும் விடுறா இல்லை. ஆம்பிளை டொக்டர்ஸ் வேண்டாமாம். காலம் கடத்தினால் அவவின் உயிருக்கு ஆபத்து. டொக்டர் ரேவதி 5ம் வார்டில் இருக்கிறா. ரெலிபோன் கூட வேலை செய்யுது இல்லை. இந்த நிலையில் அவவை விட்டு விலகவும் முடியாது.

''இவ் யூ டோன்ட் மைன்ட், பிளீஸ் உடனே டொக்டர் ரேவதியை அழைச்சு வாங்க''

பதட்டத்துடன் நர்ஸ் சொல்கிறாள்.

''ஊய்'' புலியொன்றின் திடீர் பாய்ச்சலா? ரவியின் உள்ளத்தில் தியேட்டர் தீப்பற்றி எரிவது போன்ற பிரமை உள்ளத்தை உலுக்கிய அந்தக் கற்பனைப் பயத்திலிருந்து சட்டென்று நினைவு திரும்பியவனாக,

''ஓ கடவுளே என்ரை ராஜி.''

அந்த நான்கு சுவர்களுக்குள் ஒரு பரிசுத்தமான பெண்மை தனது புனிதமான நம்பிக்கைகளைக் காப்பாற்றுவதற்காக, காலனுடன் போராடிக் கொண்டிருக்கிறது என்ற உண்மை நெஞ்சில் சுட, ரவி அந்த மருத்துவ மனையின் வராந்தாவில் 5ம் வார்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். டொக்டர் ரேவதியில் சக்தியின் வடிவத்தைக்காண கோவில் வீதிகளிலே வலம் வருவது போன்று அந்த வராந்தாவில் ஓடிக்கொண்டிருந்தான்.

அவன் மனம் நினைத்தது!—

''காலங்காலமாகப் பெண்மையின் ரூபங்கள், ராஜி போன்றும், நாகம்மா போன்றும் ஒரு சில ஊற்றுக்கண்களால்தான் திறக்கப்பட்டு, இந்தப் பூமியின் சகல ஜீவராசிகளுக்கும், ஜீவநதியாய் ஓடி, வழிகாட்டியாய் பெருக்கெடுத்து, சமுதாயத்தின் சீரமைப்புக்கு வித்திட்டு, வாழ்வு அளிக்கின்றதோ? அதனால்தான் பரிசுத்தமான பெண்மையைப் பூஜிப்பதுபோல் ''அம்மா'' என்று வணக்கத்துடன் மனித உயிர் தன் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றதோ?'

+ + +

**(யாவும் கற்பனையே)**

# கைத்தொழில் அதிபருடன் சில மணி நேரங்கள்

பிரண்வுசன் இன்டஸ்ரீஸின் உற்பத்திப் பொருட்களான கோன்பிளவர், ஜெலி, ஹஸ்ராட் பவுடர், கோப்பி. பேக்கிங் பவுடர், தாவர புரதம் (உல்ராசோய்) போன்றவைகளை சுவைத்தவர்களுக்கு அதன் ருசி தெரியும். அவைகளின் சுவையைவிட பிரவுண்சன் ஸ்தாபன உரிமையாளர் திரு. வேலணை வீரசிங்கம் இனிமையானவர் என்பது அவருடன் பேசிப் பழகியவர்களுக்கு மட்டுமே புரியும்.


வேலணை வீரசிங்கம் அவர்கள், தமது 12-வது வயதிலேயே வர்த்தகத்துறையில் ஈடுபட்டு படிப்படியாக வளர்ந்து தலைநகரில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான பிரவுண்சன் இன்டஸ்ரீசின் உரிமையாளராக உயர்ந்திருக்கிறார், இலக்கிய ஆர்வலரான இவர் தமிழ்மொழி மீது எந்தளவு பற்றுக்கொண்டுள்ளார் என்பதற்கு அவர் தமது குழந்தைச் செல்வங்களுக்கு இட்டுள்ள பெயர்களே சான்று. குறளரசு, வேழ வேந்தன், ஈழகாந்தன், இளங்கோவன், தமிழினி, இளவரசி என்பவை அவரின் மழலைச் செல்வங்களது பெயர்கள் ஆகும். இவரை செவ்வி காண்பதற்காக நண்பர் தவநேசனுடன் அவரது இல்லத்துக்கு நான் சென்றபோது அவரும் அவரது துணைவியாரும் அன்போடு எம்மை வரவேற்று உபசரித்தனர்.

அவர் தெரிவித்த கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

அரி

கைத்தொழில் துறையில் உயர்நிலையை அடைந்திருக்கும் நீங்கள் ஆரம்பத்தில் எந்த சந்தர்ப்பத்தில் வர்த்தகத் துறையில் ஆர்வம் செலுத்தினீர்கள்? என நான் எமது செவ்வியை ஆரம்பித்தபோது-

மிக அமைதியாக பதில்சொன்னார்: 12 வருடங்களுக்கு முன் ஏதாவது ஒரு தொழில் செய்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு நான் தள்ளப்பட்டதால் மிகச் சிறிய



'பிரவுண்சன்' அதிபர்
திரு. வேலணை வீரசிங்கம்

முதலீட்டுடன் வர்த்தகத்துறையில் ஈடுபட்டேன்.

இந்த அளவுக்கு நீங்கள் உயர்வதற்கு அடிப்படைக் காரணம்? இது எனது கேள்வி-

"எனது அடி மனதில் வேர்விட்டிருந்த நம்பிக்கையே காரணம். ஒரு மனிதனின் வளர்ச்சிக்கு முதலில் தேவை நம்பிக்கையே. அடுத்தது நாணயம். இந்த இரண்டும் இருந்தால் வளர்ச்சியடைந்து விடலாம். எனது வர்த்தக முயற்சிக்கு பணம் தேவைப்பட்டபோது ஆரம்பத்தில் நண்பர்களிடம் சிறு தொகை பணம் வாங்கினேன். பின்னர் வங்கியிலிருந்து ரூ. 10 ஆயிரம் கடன் எடுத்தேன். அதை உரிய காலத்தில் செலுத்திவிட்டு 20 ஆயிரம் கடன் எடுத்தேன். இப்படி படிப்படியாக நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு வந்ததால் இலட்சக் கணக்கில் வங்கிக் கடன் பெற்று எனது முதலீட்டை வளர்த்துக் கொள்ள முடிந்தது. வங்கியும் என்மீது நம்பிக்கை வைத்திருந்தது. பாவனையாளர்

களும் என் மீதும் எனது பொருட்களின் மீதும் நம்பிக்கை வைத்திருந்தார்கள்' இந்த நம்பிக்கையை வைத்தே தொழில் நடத்தி வருகிறேன்.'' இப்படி பதில் கூறிய அவரிடம்-

''அப்படியானல் வர்த்தகத்துறை முன்னேற்றத்துக்கு வேறு காரணிகள் எதுவும் தேவைப்படாது என்று கூறுகிறீர்கள்? என வினவினேன்.

விளம்பரமும் கவர்ச்சியும் ஓரளவு தேவை தான். பெரிய கம்பனிகள் விளம்பரத்தாலேயே தங்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. முதலில் நான் கஷ்டப்பட்டே மக்கள் மத்தியில் எனது உற்பத்திகளை பழக்கப்படுத்தினேன். அதன் பின்பே விளம்பரங்கள் எனக்கு கை கொடுத்து உதவின. அண்மையில் கூட டெலிவிஷன் விளம்பரத்துக்காக பல ஆயிரம் செலவில் படம் தயாரித்தேன். அதற்காக கடன்பட்டு இவைகளை நான் செய்யவில்லை. விளம்பரத்துக்காக இவ்வளவு தொகையை என்னுல் செலவிட முடியும் என்பதால் தான் செய்கிறேன்.

''உங்கள் பொருட்கள் கிராமப்புறங்களிலா நகரப்புரங்களிலா அதிகம் விற்பனையாகிறது?''— எனது கேள்வி.

''எனது பாவனையாளர்கள் ஓரளவு படித்த உயர்தர மக்களே என்பதால் யாழ்ப்பாணம் கொழும்பு போன்ற நகரங்களில் தான் கூடுதலாக விற்பனையாகிறது. சாதாரண மக்களை விட ஓரளவு மேல் மட்டவர்க்கத்தினரே எனது பொருட்களை வாங்கி பாவிக்கிருர்கள்- -அவரது பதில்.

ஐ.தே.க. அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையால் விதம் விதமான உணவுப்பொருட்களும் பதார்த்தங்களும் இங்கு இறக்குமதி ஆகின்றன. இது உங்களுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த வில்லையா?

''நிச்சயமாக இல்லை. எனது பொருட்களில் கலப்படம் இல்லாமையே இதற்கு காரணம். எனது பொருட்களை வாங்கி சுவைத்தவர்கள் தொடர்ந்தும் வாங்கவே செய்வார்கள். வெளிநாட்டு 'ஜெலி' யுடன் போட்டி போடும் அளவுக்கு தரம் வாய்ந்ததாக இருக்கிறது. பிரவுண்சன் ஜெலி. விலை கூடினலும் கலப்படம் இல்லாது இருக்க வேண்டும். பேக்கிங் பவுடருக்கான மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும் தரமான பேக்கிங் பவுடரையே உற்பத்தி செய்தேன். இதனுல் எனதுபொருட்களுக்கு நல்ல 'மார்க்கெட்' இருக்கிறது. டென்மார்க்கிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கூட கலப்படமாகவே இருக்கின்றன.''

அவரின் இந்த பதிலின் பின், அவரின் பொதுச்சேவையை பற்றி அறியும் ஆவலில் ''1964-65 காலப்பகுதியில் 'தாய்நாடு' என்ற பத்திரிகையை வெளியிட்டு வந்தீர்களே, அந்தக் காலத்தில் பத்திரிகையை வெளியிடுவதென்பது இலகுவான காரியமாக இருந்ததா?'' என கேட்டபோது—

''ஆமாம், அப்போது 100 ரூபாய்க்கு 8 பக்கத்தில் பத்திரிகை வெளியிடக்கூடியதாக இருந்தது. ஆனுல் இப்போது ஒரு படத்தை 'புளக்' செய்யவே அத்தொகை போதாமலிருக்கிறது'' எனக் கூறினுர்.

''வேறு என்ன வெளியீடுகளை வெளியிட்டிருக்கிறீர்கள்'' என்ற கேள்விக்கு—

'முகிலன் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுதியையும், 'மண்டூர் அசோகா'வின் சிறுகதைத் தொகுதியையும் திரு. அ. பொ. செல்லையா BSC அவர்களின் ''காலத்தின் விதி'' சிறுகதை ''யார் கொலைகாரன்?'' நாடகம் ஆகியவற்றை வெளியிட்டிருக்கிறேன்'' என. பதில் கூறிய அவரிடம்,

''பாராட்டப்படவேண்டிய விடயம் இது நமது நாட்டு எழுத்தாளர்களின் ஏழ்மை நிலை உங்களுக்கு புரியும். எத்தனையோ படைப்பாளிகள் தங்கள் எழுத்துருவை அச்சில் வடிக்க முடியாத அவல நிலையில் அவதிப்படுகிருர்கள். இப்படியான எழுத்தாளர்களுக்கு தொடர்ந்தும் உங்களால் உதவ முடியுமா? எனக்கேட்டேன்.

''ஓரளவு உதவிசெய்யும் எண்ணம் உண்டு. ஆனுல் உபத்திரவமாக ஆகிவிடக் கூடாது. முடிந்த அளவு உதவி செய்வேன். எழுத்தாளர்களும் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று பதிலளித்தார்.

''உயர்ந்த நிலையில் இருக்கும் உங்களிடம் பொது ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் உதவி கேட்டு வருவதில்லையா?' என கேட்டபோது,

இப்படியான உதவிகளை செய்யத்தான். வேண்டும். ஆனுல் ஏழ்மையை வளர்ப்பதை நான் விரும்பாததால் பிச்சை கொடுப்பதை கடுமையாக எதிர்க்கிறேன். தருவார்கள் என நினைத்து நான் கடன் கொடுத்தவர்கள் கூட தராமல் விட்டதுண்டு. ஆனுல் என் அனுபவத்தில் முதல் தடவையிலேயே இல்லை என்று சொல்வதும், 10 தடவைகள் கொடுத்துவிட்டு 11 ஆவது தடவை இல்லை என்று சொல்வதும் ஒன்றுதான். பழகியவர்கள்தான் எதிரியாக

முடியும் தெரியாதவர்கள் பகையாக மூடியாது

"பெரியார், அண்ணு, ஏபிரஹாம் கோவூர் ஆகியோரின் படங்கள் அவர் வீட்டை அலங்கரிப்பதை கண்ட நான் பகுத்தறிவுத்துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை தெரிந்து கொள்ளவிழைந்தபோது—

"இலங்கையில் (கொழும்பில்) முதல் முதல் பெரியார், அண்ணு விழாக்களையும் பகுத்தறிவுக் கூட்டங்களையும் நான்தான் நடத்தினேன். அக்காலத்தில் கறுப்பு—சிவப்பு துண்டை தோளில் போடுவது பெருமையாக இருந்தது. இப்போது அது கேலிக்குரியதாக் கப்பட்டுவிட்டது. பகுத்தறிவு இயக்கத்தால் தங்களைத்தான் பலர் வளர்த்துக் கொள்கிருர்கள். இந்நிலையை மாற்ற பகுத்தறிவு இயக்கம் ஒன்றை ஸ்தாபித்து நடத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருக்கிறது" என விபரித்தார்.

"நீங்கள் பகுத்தறிவுவாதத்தில் ஈர்க்கப் பட்டதற்கு ஏதாவது காரணம் இருக்க முடியுமா"?

"இளமையில் இருந்தே நான் போலிகளை வெறுக்கிறேன். கோயிலில் ஆண்டவன் இருப்பார் என்பதை நான் நம்பவில்லை. கடவுள் இருக்கிருர் என்பதெல்லாம் வெறும் போலியான மாயை. சுயநலத்துக்காகவே கோயிலை கட்டுகிருர்கள். பெயருக்கும் புகழுக்குமாகவே திருவிழா நடத்துகிருர்கள். இதனல் கடவுளுக்கோ மக்களுக்கோ நன்மையில்லை புகழுக்காக அன்னதானம் செய்பவர்கள் சோற்றுக்காகவே அழும் ஏழைகளுக்கு கிஞ்சித்தும் இரங்கமாட்டார்கள். ஆடு, மாடு, கோழிகளை வெட்டும்போது 'ஐயோ' என பரிதாபப்படுவார்கள். ஆனல் அதன் கறி மணத்தால் சுவைக்க நாவூறுவார்கள். கடவுளை உண்மையாக வழிபடுபவர்களிடம் இந்தவித போலியான செயல்கள் இருக்கக் கூடாது. கோயில் ஐயர் கூட தொழிலுக்காக —சம்பளத்துக்காகவே பூஜை செய்கிருர். இப்படியான போலி மனிதர்களாலேயே நான் பகுத்தறிவுவாதியாக மாற நேர்ந்தது"

என நீண்ட விளக்கமளித்த அவரிடம் சினிமாத்துறைபற்றிய பேச்சைத் திருப்புகிறேன். "முன்பெல்லாம் பல நாடகங்களை மேடையேற்றினீர்கள். 'புளுகர் பொன்னையா நாடகத்தையும் வானொலியில் தொடர்ந்து நடத்தினீர்கள். படம் எடுக்கும் எண்ணம் ஏதும் ஏற்பட்டதில்லையா?

"இலங்கை—இந்திய கூட்டு முயற்சியில் திரைப்படக் எடுப்பதை நான் விரும்பவில்லை. பகுத்தறிவுக் கொள்கையை வைத்து தனியாகவே படம் எடுக்கும் எண்ணம் இருக்கிறது. செய்தால் எதனையும் நிறைவாக செய்ய வேண்டும். முன்பு கூட நாடகம் போடும் போது விளம்பரம் முதல் சீன் தேடுவதுவரை முழுப்பணியையும் நானே செய்திருக்கிறேன். எனது நிறுவனத்தில் கூட எல்லாப்பணிகளை (நிர்வாகம் — விளம்பரம் — இதரவேலைகள்) நானே கவனித்து வருகிறேன். அழியாத கோலங்கள்—சிவப்புருேஜாக்கள் போன்று யதார்த்தம் என்ற துணையை பயன்படுத்தி பலவீனங்களைவைத்து வியாபாரம் செய்யாமல் மனித பகுத்தறிவு வாதத்தை வைத்தே படம் எடுக்க நினைத்துள்ளேன்"

அவர் தன் எண்ணத்தைவிளக்கிய பின் 'சுடர் சஞ்சிகைக்கு ஏதாவது ஆலோசனை கூறுங்களேன்' எனக்கேட்கிறேன்.

"சஞ்சிகைக்கு கவர்ச்சிதான் முக்கியம். அதனல் அட்டைப்பட விடயத்தில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும்" என ஆலோசனை கூறினுர்.

அவருக்கும் அவர் துணைவியாருக்கும் நன்றி கூறி விடை பெற்றேன்.

## நாணயக்கயிறு!

வறுமை வரட்சியால்
வாடும் பிறவிகளை
காசு காட்டி
வேலைக்கமர்த்தி
ஈன இரக்கமின்றி
வேலை வாங்கிட
செல்வச்சீமான்கள்
கையாளும் தந்திரம்

—அ. சுரேஸ்

# கவிச்சரங்கள்

## சிந்தனைச் சிற்பி!

''நிலவூர் மஞ்சுதாசன்''

செந்த மிழ்த் தாயின்!
சிரிய புதல் வன்!
எந்த மிழ்ப் படைஞன்
சிந்தனைச் சிற்பி!

கதிர் வேற் பிள்ளை!
கனி தமிழ் முல்லை!
உதிர்ந் தனை! முத்தே!
ஒண்ட மிழ்ச் சொத்தே!

உன்னை யழைத் தனன்!
ஓ! கொடுங் காலன்!
செந்தமிழ்த் தாயோர்;
செல்வனை இழந்தாள்!

---

## யுகபுருஷர்கள்!

திருமலை. இரா. செல்வம்

ஒருயுகத்தின்
அடிமைகள் நாங்கள்;
எதிர்காலத்தில்
எங்கள் சரித்திரங்கள்
ரத்தத்தால்
எழுதப்படவேண்டும்!
கால்களிலும் கைகளிலும்
விலங்கு பூட்டப்பட்டு
நடந்து செல்லும்
மனிதர்கள்;
நிர்வாணமாக நடந்து
செல்லும் மிருகங்கள்;
ஆமாம்:
ஒரு யுகத்தின்
அடிமைகள் நாங்கள்.

## நிச்சயமின்மை!

—சூரியன்

நேற்று
அங்கும் இங்கும்
பலர்
கொண்டு செல்லப் பட்டனர்
உனக்கும் எனக்குங்கூட
இது போல். நிகழலாம்.
திரும்பி வருவோமா?
மறுபடியும் நாளை
சூரியனைக்க ாண்போமா?
ஒன்றும் நிச்சயமில்லை,
எமதிருப்பு
அவர்களின் கையில்!

---

## வாழ்வு!

மட்டுவில் ரவீந்திரன்

காலைக் கருக்கலில்
கழனிக்கு
போய்
மாலைக் கருக்கலில்
குடிசைக்கு
வருவதால்தானோ
என்னவோ
எங்கள் வாழ்வும்
இருண்டு கிடக்கிறது!

---

## ''சட்டியிலிருந்து!

நவம்—முகுந்தன்

ஒய்யாரம் ஓங்க
நடந்த நங்கை
பாதை நீருக்கு, பயந்து
சறுக்கினாள்—
சாக்கடையில்

## ஏன்?

வதனா-தம்பிஐயா

எங்கள் குடும்பம் இனிதுவாழ—
எந்தை இயம்பிய 'நன்றாய்ப் படி'
அந்த வார்த்தை அவாரம் வைக்க
முந்தை மாதம் மூன்று 'சி'
யுடன் 'பி' யும் பெற்றும்.
அந்தோ......
பல்கலைக் கழகமும் பரிசுச்
சீட்டாய்
மாறியது ஏன்?

---

## தேவை!

—''ஈழக்குயில் இத்ரீஸ்''—

நான்
நானாக வேண்டின்
நான்
நாமாக வேண்டும்;
நாம்:
நாமாக வேண்டின்,
நாம்—
நாடு பெறவேண்டும்.

---

## வேதனை வங்கி!

-ச. புஸ்பகுமார்-

வேலையற்று நான்
வெம்பிக் கரைகையில்
வேலைவங்கியோ
நம்பிக்கை நவின்றது
ஆனால்
காலக் கரைவில்தான்
காளை நானுணர்ந்தேன்
வேலை வங்கியொரு
வேதனை வங்கியென்று




**தமிழ் ஆசிரியர்:** ஏண்டா இளங்கோ, படிப்புத்தான் ஏற மறுத்துட்டுது. இப்போ மூணுபேரும் உருப்படியா ஏதாவது தொழில் பார்க்கிறீர்களா?

**இளங்கோ:** நான் சவுரிமுடி 'பிஸ்நெஸ்' செய்கிறேன். தம்பிமார் வளவனும் மாறனும் அதே கடையில புடவை வியாபாரம் செய்கிறுங்கள்.

**த. ஆசிரியர்:** ரொம்ப சந்தோஷம். ஏண்டா கடைக்குக்கூட தமிழ்ப்பெயர் வைப்பீங்களே?

**இளங்கோ:** ',முடி - உடை மூவேந்தர்'' அப்படீன்னு பேர் வைச்சிருக்கிறோம்.

* * * *

ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு நேர் எதிரே தெருவோரத்தில் குந்தியிருந்த பிச்சைக்காரன் தீனக்குரலில் அரற்றினுன்.

''அம்மா தாயே! வயிறு பசிக்கிறது. ஏதாவது சொக்லேட் ஐஸ்கிறீம், கரமேல, புடிங் வகையில் ஒரு கவளம் 'டெஸ்சேட்ஸ்' தர்மம் பண்ணுங்க...''

* * * *

''என்னடி 'மூதேவி' என்று பெயர் எழுதியிருக்கிறுய்?''

''அடிப்பாவி... 'மூ. தேவி' யடி எங்கப்பா பெயர் மூர்த்தி. இடையில புள்ளி அழிஞ்சு போச்சுது''

* * * *

**வந்தவர்:** ஏன் பாருங்கோ? இஞ்சை 'TO LET' என்ற போர்ட்டுடன் ஒரு சிறிய அறை வாடகைக்கு இருந்ததே?

**வீட்டுக்காரர்:** ஓம் பாருங்கோ......ஆரும் எடுக்கேயில்லை. இப்ப இடையில ஒரு எழுத்தைப்போட்டு எங்கடை தேவைக்கு 'TOILET' ஆக மாத்தியிருக்கிறன்.

* * * *

கல்லூரிக் கன்ரீன் மனேஜருக்கு மாணவன் மோகன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது பழைய பாக்கியை இன்னும் கொடுத்துத் தீர்க்கவில்லை. இந்த லட்சணத்தில் தன் காதலியையும் கூட்டி வந்து தேநீர் குடித்துவிட்டு பாக்கியைப் பெருக்கிவிட்டுப் போகிறுன். மனேஜர் தீர்மானித்துவிட்டான். அவன் காதலி முன் காசைக்கேட்டு மோகனை அவமானப் படுத்திஞல்தான் பாக்கிவரும் என்பது மனேஜரின் திட்டம்.

இதோ ...... காதலியுடன் வந்து தேநீர் குடித்துவிட்டு வெளியேறுகிறுன் மோகன்.

**மனேஜர்:** தம்பி மோகன்! இந்தக் காசு... இன்னும்.... நீங்கள்...

**மோகன்:** இருக்கட்டும் பிறகு எடுக்கிறேன். (இடையில் வெட்டிச் சமாளித்துக் கொண்டு காதலியுடன் சாவதானமாக வெளியேறுகிறுன்,)

* * * *

**ஒருவன்:** நம்ம கோபிக்கு எடுத்ததுக்கெல்லாம் மூக்கின் மேல் கோபம் வருகிறதே!

**மற்றவன்:** எந்தக் கோபி?

**ஒருவன்:** அவன் தாண்டா முன்கோபி.

* * * *

''என்னடா பத்திரிகையைப் பார்த்து இடிஞ்சு போயிருக்கிறுய்?''

''பத்திரிகையில ஒரு திருமண விளம்பரம் கொடுத்திருந்தேண்டா ..... கெடுத்துப்போட்டீங்க''

''ஏண்டா என்ன ஆச்சு?''

''அழகில் 'தாரகைபோல' ஒரு மணப்பெண் வேண்டும் என்று கொடுத்தேன். அச்சுப் பிழையாகி 'தாடகை போல என்று போட்டிருக்காங்க''

* * * * * * * * * * *

விவரணச் சித்திரம்

# மேதினச் சுவடு.

—எஸ். அகஸ்தியர்—

பொங்கி எழும் கடல்அலைகள்போல் ஜனத்திரள் சாரை சாரையாக ஜார் மன்னன் மாளிகையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

அவர்கள் கண்களில் ஜார் மன்னனின் கோபுர மாளிகை 'பளிச்' சென்று தெரிகிறது.

சகிக்க முடியாத வாழ்க்கையில் உழன்று போன அவர்களின் அழுக்கேறிய சாம்பல் நிற முகங்களில் ஏக்கம் துடித்துக் கொண்டிருந்தது.

சிறு பறவைகளின் கீச்சுக் கூச்சல்களாக அவர்களிடையே வார்த்தைகள் கிளம்பின:

"தாங்கமுடியாத உபத்திரவ வாழ்வை அனுபவித்து மாய்வதைவிட, இன்பவாழ்விற்காகப் போராடி மாண்டு விடுவது மேல்"

"ஒன்ரு ரண்டா? எத்தனை ஆண்டுகளாக எத்தனை காலங்களாக இப்படிப் பொறுத்துக் கொண்டு மாய்வது?

"நாங்கள் ஏழைகள் தான். ஆனல், உழைப்பாளர்கள்; ஜார் மன்னனைப் போல் மனிதர்கள்.

"எங்களிடம் இழப்பதற்கு எதுவுமே யில்லை. அடைவதற்கு உலகமே இருக்கிறது"

"நாங்கள் உருக்குலைந்திருக்கிறேம். ஆனல் உலகத்தை வெல்ல எங்களிடம் 'சக்தி' யுண்டு"

தொழிலாளர்களின் குரல்கள் அந்தகாரித்துக் கமறுகின்றன.

பழைய பஞ்சாலிகள் மட்டும் எதையோ 'முணு முணு' க்கின்ருர்கள். இவர்களுக்கு வாழ்க்கையின் முழுப்பாகமும் கடந்த மோன நிலை.

ஆயிரத்துத்தொளாயிரத்தி ஐந்தாம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்திரண்டாம் நாள்.

'செயின்ற் பீட்டர்ஸ் பார்க்' நகரின் ஆண்கள் — பெண்கள் — இளைஞர்கள் — தொழிலாளர்கள் — குழந்தைகள் என்று சுமார் இரண்டு லட்சம் மக்கள் திரள் ஜார் மன்னனின் மாரிகால அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு உறுதுணையாக நின்று அவர்களுக்காக ஜாரிடம் வாதிட உத்தரவாதம் அளித்த பாதிரி கேபன் அவர்களை வழி நடத்திச் செல்கிருர்.

அவர் மாதா உருவம் தாங்கிய கொடிகளையும் ஏந்திப் பிடித்து வருமாறு கூறி, அவர்களுக்கு வழி காட்டிக் காட்டி, அவர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்கின்ருர்.

தங்களின் இன்னல்கள் தீர, கோல்பிடித்த கொற்றவன் ஜார் மன்னனிடம் பாதிரி கேபன் தலைமையில் 'கருணை' வேண்டிப் போய்க் கொண்டிருக்கிருர்கள், மக்கள்.

பாதிகேபன் அவர்களின் பிரதிநிதியல்லவா? அவர் இருக்கும் போது இனி அவர்களுக்குக் கவலை இல்லை.

அவர் ஞானக்குரு மாத்திர மல்ல, அவர்களின் வாழ்க்கைக்காகவுமல்லவா, அவர்களை அரசனிடம் அழைத்துச் செல்கின்ருர்.

'திடீ' ரென்று கம்பீரமான ஒரு குரல் கூட்டத்திலிருந்து கேட்டது, அதுமிகத் தெளிவாகக் காதில் விழுந்தது:

"தோழர்களே, ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு இடங்கொடுக்காதீர்கள் நாங்கள் பல தடவைகள் 'பெரிய' மனிதர்களால் வஞ்சிக்கப்பட்டவர்கள். ஞாபகமிருக்கட்டும்!"

அவன் செஞ்சட்டையும் கிழிந்த தொப்பியும் அணிந்திருந்தான்.

அவன் ஏந்திய கொடியில், 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்ற வாசகம் கம்பீரித்துக்கொண்டிருந்தது.

அவன் முகத்தில் ஏக கேள்விக் குறி.

"ஏய் நீ பேசாமல் சும்மா வாப்பா பாதிரிகேபன் நம்முடனல்லவா இருக்கிறார்? எங்களுக்கு என்ன பயம்?''

யாரோ ஒரு வயோதிபன் பதிலளித்து விட்டு விரைந்தான்.

பாதிரி கேபன் ஏதோ 'முணுமுணு'த்துக் கொண்டு இன்னும் அவர்களோடு நடந்து கொண்டேயிருந்தார்.

வெற்றியில் முழு நம்பிக்கை வைத்து முன்னேறிக்கொண்டிருந்த அவர்கள் முகங்க ளில் இப்போது கவலையும் சந்தேகமுமான ரேகைகல் லேசாகப்படர்ந்தன'

இந்தக் கட்டத்தில் அவர்கள் தங்களுக்கு தாங்களே வாயோச்சமாகப் பேசிக் கொண் டனர்:

":நாங்களும் மனிதர்கள் இது ஜார் அரச னுக்கு புரியும் தானே?"

"ஜார் எப்படியாவது எங்கள் முறைப் பாடுகளுக்குச் செவிசாய்க்கத்தான் வேண்டும். நாங்கள் என்ன பட்டம் பதவி, கோட்டை கோபுரமா கேட்கப்போகிறோம்?"

"எங்கள் நீதியான கோரிக்கைகளைத் தட் டிக்கழிக்க, ஜார் அரசன் என்ன அவ்வளவு முட் டாளா? எப்படியாவது அவர் கோரிக்கை களைத்தருவார்''

"நண்பர்களே, நாம் சுதந்திரம் கூடக் கேட்கவில்லை. பட்டினியின்றி மனிதர்களாக வாழவே கேட்கின்றோம்''

"ஆமாம், பசி, தீராத பசி, எதனையும் வேண்டிக் கொள்ள முடியாத இல்லாக் கொடுமை. இது கூடவா அரசனுக்குப் புரி யாது?"

"நிச்சயம் தெரியும். சுட்டாயம் எங்க ளின் சிறு கோரிக்கைகளுக்காவது அனுகூலம் கிடைத்தே தீரும்''

'மளமள'வென்று ஒருவரையொருவர் பார்த்துத் தமக்குள் பேசிக் கொண்டார்கள். ஆனால், அவ்வார்த்தைகளில் ஜீவன் இருக்க வில்லை. ஏழ்மையின் துயரங்களே குழைந் திருந்தன.

அப்போது பாதிரி கேபன் தனக்குள் லேசாகச் சிரித்தார்.

பைத்தியக்காரவிடுதியில் உள்ள நோயாளி களின் பேச்சைக் கேட்டுச் சிரிக்கின்ற டாக் டர்களின் தோரணை, அவர் சிரிப்பில் தேங்கி யிருந்தது.

மக்கள் கூட்டம் ஜாரின் அரண்மனையை நெருங்கி விட்டது.

அப்போது அவர்களிடம் தேங்கியிருந்த உற்சாகம் கரைபுரண்டு வீறு கொண்டு நின் றது.

குளிர்கால அரண்மனையில் 'குளுகுளு' வென்று இன்பப் போதையிலிருந்த ஜார் மன்னனுக்கு—இந்த மக்கள் கூட்டம் கண்டு கோபம் கொப்பளித்தது. ஆனால், அவன் அதைக் காட்டிக் கொள்ளாமல் சாதுபோல் சிரித்தான்.

தன் உற்ற நண்பன் பாதிரி கேபனைக் கண்டதும் அவன் கோபமும் சிரிப்பும் மறைந்துவிட்டன.

அவனும் மறைந்துவிட்டான்.

எங்கோ ஏதோ அதிருந்தொனிகள் கேட் டன.

ஏதேதோ சைகைகளால் அவன் தளபதி கள் புரியமுடியாத பாதையில் என்னவோ வீறுகப் பேசி ஜனக்கூட்டத்தைச் சுட்டிக் காட்டி நின்றார்கள்.

மக்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே ஏக்கம் ஏக திகில்.

இந்த நேரத்தில் தங்கள் அருந்தலைவர் பாதிரி கேபனைத் தேடத் தலைப்பட்டனர். எங்கு முடியுமோ அங்கெல்லாம் நுழைந்து தேடிப்பார்த்தாகிவிட்டது.

'பாதிரி கேபன் எங்கே?'

ஏகமாக ஒரே குரலில், தடுமாறிக் கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவராக இப்படிக் கேட்டுக் கொண்டனர்.

யார் பதிலளிப்பது?

இப்போது அந்தத் தொழிலாளி— அந்த வாலிபன்—அந்தச் செஞ்சட்டைக்காரன் பதி லளித்தான்:

"தோழர்களே, நாம் உழைத்து உழைத்து உருக்குலைந்து போன பாட்டாளிவர்க்கம். உரிமை கேட்ட அத்தனை பாட்டாளி-தொழி லாள உழைப்பாள மக்களின் குரலை ஏக காலத்தில் அடக்குவதற்கு ஜார் அரசன் வகுத்த திட்டத்தின் ஒரு சதிக்கருவிதான் பாதிரி கேபன். அவன் ஏழைத் தொழிலாளர்களான எங்களை அவன் துப் பாக்கிமுனைவரை கொண்டு வந்து சேர்த்து விட்டு எங்கோ மறைந்துவிட்டான், பாதிரி கேபன் துரோகி! ஆம், அவன் பெரும் கொலை காரன்!''

உச்சிக் கம்பத்தில் ஏறி நின்று அந்த இளை ஞன் மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஆக் ரோஷமாக எச்சரிக்கை செய்தான்.

அவன் கண்கள் செக்கச் சிவந்து கொண் டன. ஆவேசத்தின் அந்த காரம் கண்களில்

பனித்துளிகளாய்க் கக்கியது; மீண்டும் ஏதோ எச்சரிக்கை செய்ய வாயெடுத்தான்.

ஆனால், அதற்குள்.

அந்தோ ஜாரின் படைகள் அரண்மனைத் தளத்தில் நின்று...

'டுமீல்!...டுமீல்!!...டுமீல்!!!...'

மூன்று துப்பாக்கிச் சன்னங்கள் அந்த இளைஞன் மார்பை ஊடறுத்துப் பாய்ந்து விட்டன.

அதோ பாதிரி கேபன் எங்கோ அதிர்ந்து ஓடுகிறான்.

அவன் எங்கே போகிறான்?

அது யாருக்கும் தெரியாது.

மக்கள் கூட்டம் திகில் கொண்டு திக்கெல்லாம் சிதறி ஓடிக் கொண்டிருக்கிறது.

**ரஷ்யப் புரட்சிக்கு முன் ஜார் ஆட்சியில் அங்கு நிகழ்ந்த கோரமான நிகழ்ச்சிகள் அனந்தம். அவற்றில் ஒன்று இங்கே சிறு கதையுருவத்தில் விவரணமாகத் தரப்படுகின்றது. இதனையே மகாபுருஷர் லெனின் 'நிகழப் போகும் புரட்சிக்கு ஒத்திகை' என்று தீர்க்கதரிசனமாக வர்ணித்திருந்தார்.**

எங்கிருந்தோ ஒரு பெரும் சிரிப்பொலி அட்டகாசித்துக் கேட்கிறது.

"நாய்களைச் சுட்டுத் தள்ளுங்கள்!"

'டுமீல்...டுமீல் . டுமீல்...டுமீல்...டுமீல்'

காண்டா மிருகம்போல் தளபதி கர்ஜித்து கொண்டு அந்தக் கேரிப் போனகுரலில், மீண்டும் நாய்போல் கத்தினான்.

"சுட்டுத் தள்ளுங்கள்; சன்னங்கள் ஒழியும் வரை சுட்டுத் தள்ளுங்கள்"

சகல திக்குகளிலும் ஒரே துப்பாக்கி வெடிச் சத்தம்.

எங்கும் மரண ஒலி

எல்லாம் பிணமயம்;

அனைத்தும் ரத்தப் பிரளயம்.

ஒரே இரத்த வெள்ளம்.

அந்த மைதானமே ஏக சிவப்பு மண்டலமாகத் தெரிந்தது.

இதோ, ஜாரிடம் தங்கள் குறைகளைக் கூறப்போன மக்களின் பிணக் குவியல்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மனிதச் சடலங்கள் இரத்த வெள்ளத்தில் புரண்டு கிடக்கின்றன.

'தோழர்களே! உலகம் எங்களுக்கானது உலகப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக நாம் இறந்துபடுவோம்.....!'

இளைஞனின் கடைசிக்குரல் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'மிலேச்சனே ஜார், இன்று இந்த மக்களைக் கொன்று விட்டதால் ஆணவம் கொண்டாய். ஆனால், இந்தப் பிரளயம் உலக மக்களின் விடுதலைப் போரை உத்வேகப்படுத்தும் புரட்சியின் சின்னம். இது எதிர் காலப் புரட்சிக்கு ஓர் ஒத்திகை என்பதை நினைவிற் கொள்...இது நெருப்பாக மூண்டு உன் அதிகாரக் கோபுரத்தையே.எரித்து நீறுக்குவது உண்மை. உனது மக்களையா நீ கொன்று விட்டாய்...''

ஜாரின் மருண்ட கண்களில் இப்போது மகாபுருஷர் லெனின் உருவமும், தொழிலாளர் வர்க்கப் போர்க்களமும் எதிரடித்து உலகத்தை வேண்டிக்கொண்டிருந்தனர்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'

---

## அது, என்ன வழி?

எதிர்மாறான இரு போட்டிக் கட்சிகளின் அரசியல்வாதிகள் பொது மேடையில் மோதிக் கொண்டார்கள்.

**ஒருவர்:** பணம் சம்பாதிப்பதற்கு பல வழிகள் உண்டு. ஆயினும் ஒரேயொரு வழிதான் நேர்மையான வழி.

**மற்றவர்:** என்ன வழி?

**ஒருவர்:** அது உமக்குத் தெரியாத வழி என்று எனக்குத் தெரியும்.

* * * * *

## சொன்னார்கள்!

காதலின் சுவை பிரமாதம்—சுமை பத்து மாதம்!

-தமிழ்ப்பித்தன்-

எழுதும்...

# அழியும் நெஞ்சங்கள்

நிர்மல்.

சாந்தியிடம் விடை பெற்றுக் கொண்டு வந்த ராஜ்குமார் யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவள் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதில் ஒலித்தன. 'ஓ... சாந்தி உன்னுடைய அப்பா யாரென்று உனக்குத் தெரியாதா? உன்னைப் பெற்றவுடன் உனது அம்மா தற்கொலை செய்து கொண்டு விட்டாளா?... கலியாணமாகாத ஒருத்திக்குப் பிறந்த பிள்ளையா நீ?— அவனது மனதில் ஆயிரம் கேள்விகள் !

சாந்தி அருகே இருந்த வரையில் அற்ப விடயமாகத் தோன்றிய விவகாரம் இப்போது இராட்சத உருப் பெற்று பூதாகாரமாக அவன் மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறதே. சாந்தியிடம் அதைப்பற்றி அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறி அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் பல கூறிவிட்டு வந்த பின்னரும் அவனது மனம் ஊஞ்சலாடுகிறதே! இது ஏன்? —அவனுக்கே புரியாத புதிராக இருந்தது.

அவனது கதைகளிலும், பேச்சிலும் மாத்திரமன்றி நடைமுறையிலும் எத்தனையோ முற்போக்கான கருத்துக்களை ஏற்றுக் கொண்டவன் ராஜ்குமார். எதையும் புத்தி பூர்வமாக அலசி, போலித்தனங்களை எல்லாம் இனம் கண்டு ஒதுக்கி முற்போக்காக வாழ்ந்து வருகின்ற ராஜ்குமார் இப்போது மட்டும் ஏன் தடுமாற வேண்டும்?... இன்றுவரை அவன் கடைப் பிடித்து வந்த சீர்திருத்தங்கள் எல்லாம் வெறும் வெளி வேஷங்கள் தானே? ம்...... அப்படியில்லை அப்படியானால்......?

அவன் யோசனையில் ஆழ்ந்திருக்கையிலேயே அம்மா சாப்பிட அழைத்தாள். அவன் வேண்டாம் என்று மறுத்தும் அவள் விடுவதாயில்லை. பசி இல்லாவிட்டாலும் அம்மாவைத்திருப்திப் படுத்துவதற்காக சாப்பிட அமர்ந்தான். வழக்கமாக கலகலப்பாக இருக்கின்ற அவன் மௌனமாக இருந்து சாப்பிடுவதாகாகப் பாவனை செய்வதை அம்மா அவதானித்தாள். "ஏன் ராஜ்குமார் ஒரு மாதிரி இருக்கிறே?" என்று தாளாமல், கேட்டே விட்டாள்.

அம்மா பரிவோடு கேட்கின்ற இந்த நேரத்தில் அம்மாவிடம் எல்லாவற்றையும் போட்டு உடைத்து விடலாமா? என்று ஒரு கணம் எண்ணியவன், ஒரு வேளை அவளால் இதை ஜீரணிக்க முடியாமல் போய் விட்டால்...... என்று தயங்கினான். சாந்தியின் பிறப்பு இரகசியத்தை அறிந்தால், இப்படியான ஒரு பெண் மருமகளாக வரவேண்டாம் என்று சொல்லி விடுவாளோ? என்றெல்லாம் பலவாறாக எண்ணினான். எனினும், யாரிடமாவது மனதில் உள்ளவற்றைச் சொல்வதன் மூலம் சிறிதாவது ஆறுதலாக இருக்கும் என்று எண்ணியதால் சாந்தியைப் பற்றிய இரகசியத்தை அம்மாவிடம் கூறினான்.

அவன் எதிர்பார்த்தது போலவே அம்மா அவன் கூறியதைக் கேட்டதும் சீற்றம் கொண்டாள். "நான் அப்பவே சொன்னேன் இந்தப் பெண் வேண்டாம் எண்டு... நீ தான் பிடிவாதமாக நின்றாய்... ஆனால் இனிமேல் நான் இந்த கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டன் நீ தம்பித்துரை மாமாவின் மகள் இந்துமதியைத்தான் கலியாணம் செய்யணும்... கௌரவமான குடும்பம்... அவளிடம் அழகிருக்கு பணமிருக்கு... பண்பிருக்கு" என்று அம்மா அடுக்கிக் கொண்டு போனாள். "அம்மா" என்று ஆத்திரத்துடன் குறுக்கிட்டான் ராஜ்குமார். சாந்தி அப்படிப்பட்டவளல்ல... நான் அவளைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் கட்ட மாட்டன்..."

"ஓ... அந்தளவுக்கு வந்திட்டியா?... ஓ அதையும் பார்க்கலாம்... அப்படி நீ சாந்தியைக் கட்டுறதாக இருந்தால் என் பிணத்தைக் கண்ட பின்னர் தான்......" என்றாள் ஆவேசமாக. அம்மாவின் வார்த்தைகள் கீறல் பட்டிருந்த அவன் இதயத்தில் மேலும் வலியை ஏற்படுத்தியது. பதிலெதுவும் சொல்லாமல் படுக்கையில் வந்து விழுந்தான் ராஜ்குமார்.

சாதாரணமாக அவன் எதற்குமே கலங்குபவன் அல்ல. ஆனால் அவன் இப்போது மிகவும் குன்றிப் போயிருந்தான். நெஞ்சில் குமுறுகின்ற எண்ணங்கள் தூக்கத்திற்குத் தடை போடவே கட்டிலில் உருண்டு உருண்டு படுத்தான்.


அவனது மனது ஓயவில்லை. அதைக் கடிவாளமிட்டுக்கட்டுப் படுத்த அவனால் முடியவில்லை. சாந்தியில் ஏதோ குறைபாடு இருப்பது போன்ற மனநிலை

அவனுள் உருவாகிக் கொண்டிருந்தது. இடையிடையே அவனது பகுத்தறிவும் எட்டிப் பார்க்காமலில்லை. சீ... ஏன் இப்படியெல்லாம் 'கன்னு பின்னு' என்று எண்ணுகிறேன்?.... அம்மா தவறுவிட்டு விட்டாள் என்பதற்காக பாவம் மகள் என்ன செய்வாள்?... தாய் கூட யாரோ ஒரு அயோக்கியனை நம்பி ஏமாந்தது தவறு?..... பாவம்... சாந்தியைப் பெற்றெடுத்த பின் அந்த அபலைப் பெண் தற்கொலை செய்து விட்டாளே! ... ம்ம்... உயிரை மாய்த்துக் கொண்ட பின்னர் கூட பழி தீரவில்லையே... அந்தப் பழி ஒன்றுமறியாத சாந்தியையும் தொடருகிறதே!... ஓ...சமுதாயமே... சந்திரனில் காலடி எடுத்து வைக்குமளவுக்குச் சிந்தனைத் திறன் நிறைந்தவர்களால், சாதாரண அபலைப் பெண்ணொருத்தி அறியாப் பருவத்தில் ஒரு அயோக்கியனை நம்பி ஏமாந்து விட்டதை மன்னிக்க முடியவில்லையே! ...ம் ம்... மனிதனை மனிதன் புரிந்து கொண்டிருந்தால் இனக் கலவரங்கள், சாதிப்பூசல்கள் எல்லாம் ஏன் தொடர வேண்டும்... ? ...' —ராஜ்குமார் தவியாய்த்தவித்தான்.

"பதிவுத்திருமணம் செய்து கொள்வோமே" என்றுமாலையில் சாந்தியிடம் மனப்பூர்வமாகக் கூறியவன், இப்பொழுது அந்தத்தீர்க்க முடிவில் நிற்காமல் நழுவிக் கொண்டிருக்கிறனே! —ஒரு கணம் அவனுக்குத் தன் மீதே வெறுப்பேற்பட்டது. '....நான் சாந்தியைக் கைவிடமாட்டேன் அவளில்லாமல் என்னுல் மகிழ்ச்சியாக வாழ முடியாது'— அவனது மனதின் மறு பக்கம் மனச் சாட்சியின் பக்கம் மனத்திரையில் கோடு கிழித்துச் சித்திரம் வரைந்தது. கூடவே மனது சற்று நிம்மதியடைவது போலிருந்தது. தன்னையறியாமலே அவன் உறங்கிப் போனுன்.

மறுநாள் காலையில் கண் விழித்த போது மனது சிறிது தெளிவுபட்டிருந்தது. அடுத்த சில நாட்களில் அவன் மீண்டும் கலகலப்பான ராஜ்குமாரனுன்: சாந்தியில் எந்தக் குறைபாடு இருப்பதாகவும் இப்போது அவன் மனதுக்குத் தோன்றவில்லை. 'இவளே எனக்கு ஏற்றவள்' என்று அவன் மனது ஆனந்த கீதம் இசைத்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவள் அவனிடம் சொன்னுள்: "எனது அப்பா யார் என்று அறிய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது............ ஆனுல் அம்மாவிடம் — என்னை வளர்க்கும் அம்மாவிடம் கேட்க என்னவோ போலிருக்கிறது. அப்பாவும் தன் பதிலில் இதை மூடி மறைத்தே எழுதியிருந்தார்...." என்றுள்.



**முக்கோணக் கதையை நிறைவு செய்யும் தமிழ்ப்பித்தன்**

ராஜ்குமார் சிறிது நேரம் யோசித்தான். பின்னர், என்னைப் பொறுத்தவரை அது அவசியமில்லாத ஒன்றென்றே தோன்றுகிறது.... இனி நீ கணவனுடன் — என்னுடன் இணையப் போகிறவள்—உனது கடந்த காலத்தை வேதனை நிறைந்த அந்தச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பதில் என்ன லாபமிருக்கிறது?... என்னைப் பொறுத்த வரை 'ஐ லவ் யூ அவ்வளவுதான் !..." என்றுன் ராஜ்குமார் கனிவுடன்.

அவன் அப்படிச் சொல்கின்ற போது அவளுக்கு ஆறுதலாக இருந்தாலும் கூட, தனது தகப்பன் யார் என்று அறிவதிலும், அவர் இன்னமும் உயிருடன் இருக்கிருரா என்று தெரிந்து கொள்வதிலும் இருக்கின்ற ஆர்வம் குறைவதாயில்லை. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாமல் புன்னகைத்தாள்.

ஓயாத அலைகள் போலவே அவளது மனது ஒரு முடிவுக்கு வர முடியாமல் தத்தளித்தது. கூடவே ராஜ்குமார் பிறப்பைப் பற்றி வீட்டில் கூறியது பற்றி அவளிடம் எதுவும் சொல்லாததும் அவளது மனதை அரித்துக் கொண்டிருந்தது. அவனே, அவளுடைய மனதை புண்படுத்த வேண்டாம் என்பதற்காகத்தான் தாயாருடன் உரையாடியதைப் பற்றிக் கூருமல் தட்டிக் கழித்து வந்தான். ஆனுல் அவளே வழக்கம் போல இன்றும் கேட்டாள். 'ராஜ்... என்னுடைய பிறப்பைப் பற்றி நீங்கள் உங்கள் பெற்றேரிடம் கூறிவிட்டீர்களா?"

அவளது அவாவையும் தவிப்பையும் கண்டபோது அவனுக்கு என்னவோ போலிருந்தது. யாவற்றையும் விபரமாக இவளிடம் சொல்லி விடலாமா என்று ஒருகணம் எண்ணியவன், அம்மா மறுப்புச் சொல்லி விட்டார் என்பதை அறிந்தால் இவளது மனம் வேதனைப்படுமே என்று தீர்க்கமாக யோசித்தான். எனினும் அவளிடம் எதையுமே மறைக்க மனம் வராததால் மனம் திறந்து அம்மா கூறியதை கூறினுன்.

அவள் அதிர்ந்து போய் கடலையே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்து இருந்தாள். நீண்ட ஒரு பெருமூச்சைத் தொடர்ந்து "இது நான் எதிர் பார்த்தது தான்" என்று முணுமுணுத்தாள். அவளது உணர்ச்சிக்கொந்தளிப்பை அவனுல் புரிந்து கொள்ள முடிந்தது.

"சாந்தி,... அம்மா மறுப்புச் சொல்லி விட்டார். என்

பதற்காக நான் உன்னைக் கைவிடப் போவதில்லை.... நீ தான் என் வாழ்க்கைத்துணைவி என்பதில் மாற்றம் கிடையாது. அது எப்பொழுதோ எடுத்த முடிவு..'' என்றான். அவனது வார்த்தைகள் அவளது உள்ளத்தில் தேனாகப் பாய்ந்தது.

சிறிதுநேர மௌனம் இருவரிடையேயும் திரையிட்டது. மௌனத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவளாக ‘‘ராஜ் ஒன்று சொல்ல மறந்து விட்டேன்... நாளைமறுதினம் அப்பா வெளிநாட்டிலிருந்து திரும்புகிறார்...'' என்றாள் சிறிது உற்சாகத்துடன். ‘‘மகிழ்ச்சி'' என்றான் ராஜ்குமார். ‘‘நாங்கள் விமான நிலையத்திற்கு போய் அவரை எதிர் கொள்வோம்''— அவள் எதிர்பார்த்ததை அவன் சொல்லவே அவளுக்குப் பூரிப்பாக இருந்தது. ‘‘ராஜ்... நீங்கள் என்னைப் புரிந்து கொண்டவர்'' என்றாள் மகிழ்ச்சி பொங்க.

திட்டமிட்டபடியே இரண்டு நாட்கழித்து விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றனர். சாந்தி இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தாள். ‘‘ஐ ஆம் மிஸ்டர் நடராஜ்... சாந்தியுடைய அப்பா...'' என்று அவனது கைகளைப் பூரிப்போடு பற்றிக் கொண்டவர், தொடர்ந்து ‘‘சாந்தி எல்லாம் விபரமாக எழுதியிருந்தாள்.'' என்றார். அவர் தமது காதலை அங்கீகரித்த மாதிரிப் பேசுகையில் இருவருக்கும் பூரிப்பாக இருந்தது. காரில் வீட்டிற்குப் போய்க்கொண்டிருக்கையில் அவர் சொன்னார். ‘‘சாந்தி நான் மறுபடியும் வெளிநாடு போகுமுன் உங்கள் திருமணத்தை நடாத்தி கண்குளிரப் பார்க்கணும்.....''

இரண்டு வருட இடைவீட்டு வீட்டிற்கு வந்திருந்ததால் அடுத்த சில நாட்கள் நண்பர்கள், உறவினர்கள் என்று பொழுது கடந்து கொண்டிருந்ததால் கலியாண நடவடிக்கைகளில் இறங்க வாய்ப்புக் கிட்டவில்லை.

இடையில் ஒருநாள், சாந்தி தனது பிறப்பு பற்றிய இரகசியங்களை அறியும்படி நடந்து கொண்டதற்காக மனைவியைக் கடிந்து கொண்டார் நடராஜா. அம்மா இதைக் கேட்டதும் இடிந்து போனாள். அப்பாவைச் சமாதானப் படுத்துவதில் போதும் போதும் என்றாகி விட்டது, பின்னர் சாந்தியுடனும் அழாக் குறையாக உரையாடினாள்.

‘‘சாந்தி... உன்னை நான் பெற்றெடுக்கா விட்டாலும் என் பிள்ளையாகவே வளர்த்தன்... வளர்க்கிறேன்... என்னிடம் பேதமெதுவும் இல்லை... ஏன் எல்லாவற்றையும் என்னிடம் மறைத்து விட்டாய்... உனக்கு சம்பந்தம் ஒன்று வந்த போது ஒரு தாயுடைய ஸ்தானத்தில் நின்று கொண்டு தான் யோசிச்சன்... மூத்தவளுக்கு முழுவதையும் குடுத்து விட்டால் மற்றதுகளுக்கு எங்கே போவது என்ற தவிப்பில் கதைத்த போது உன் பிறப்பு பற்றி என்னை அறியாமல் உளறிவிட்டேன்... என்னுடைய கெட்டகாலம் நீ கேட்டுக் கொண்டு நிண்டுட்டாய்... நான் பெறாவிட்டாலும் நீ என் மகள் தான்... என்னிடம் மாற்றாந்தாய் மனப்போக்கு இல்லை...''— இதைச் சொல்லும் போதே அவளது கண்கள் ஊற்றெடுத்தன. சாந்தியும் நடராஜாவுமாகச் சேர்ந்து அவளைச் சமாதானப் படுத்தினார்கள்.

‘‘இப்பொழுதே சாந்தியின் விருப்பப்படி ராஜ்குமாரை அவளுக்குச் செய்து வைத்தால் தான் எனக்கு நிம்மதி... எவ்வளவு சீதனம் கேட்டாலும் கொடுப்போம்...'' என்றாள், கண்ணீர்க்கரை பட்ட கன்னங்களை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே அவளைப் பார்த்ததும், அந்த வேதனை படர்ந்த முகத்தைப் பார்த்ததும் சாந்திக்கு வேதனையாக இருந்தது. இவ்வளவு பாசம் வைத்துள்ள அம்மாவை தப்பாக எடை போட்டு விட்டேனே என்றபடி, ‘அம்மா. என்னை மன்னிச்சிடுங்க' என்றாள்.

இரண்டு மூன்று நாட்கள் கடந்திருக்கும். ராஜ்குமார் வீட்டிற்கு சம்பந்தம் பேசிப் புறப்பட்டார் நடராஜா. அங்கே அவருக்குப் பேரிடியொன்று காத்திருந்தது ‘‘தகப்பன் பெயர் தெரியாத பெண்ணுக்கு எங்கள் மகனை மணம் முடித்து வைக்க எங்களுக்கு விருப்பமில்லை...'' என்று அடித்துச் சொன்னாள் ராஜ்குமாரின் அம்மா.

நடராஜா பல சமதானங்கள் சொன்னார். அவளோ கேட்பதாக இல்லை. ‘‘நாங்கள் கௌரவமாக வாழுர குடும்பம்... பிரபல அரசியல் பிரமுகர், கொடைவள்ளல் தம்பித்துரையவர்களின் மகளை எங்கள் மகனுக்குப் பேசி வந்திருக்கு...'' என்ற அம்மாவின் கோபத்தையும், படபடப்பையும் பார்க்கையில் அருகிலிருந்த ராஜ்குமார் சிறிது கலங்கித்தான் போனான். நடராஜா தான்' தொடர்ந்து அம்மாவை சமாதானப் படுத்தினார். ‘அவசரப்படாதீங்க... சாந்தியின் அப்பா யார் என்று அறிந்தால் ஆச்சரியப்படுவீங்க... சற்று முன்னர் தம் பட்டமடித்தீர்களே...... அதே தம்பித்துரை தான் சாந்தியின் அப்பா! அயோக்கியப்பயல்... அந்த நாளில் அவன் என்னுடைய நண்பன்...... சாந்தியுடைய அம்மாவைக் காதலித்துக் கர்ப்பவதியாக்கி விட்டு சீதனத்திற்காக வேறு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்ட ராஸ்கல்... அவனுடைய துரோகத்திற்குப் பரிகாரம் காண நான் சாந்தியின் அம்மாவுக்கு வாழ்வளிக்க முன் வந்தேன். ஆனால் அவள் சாந்தியைப் பெற்று விட்டுத் தற்கொலை புரிந்து விட்டாள். பின்னர் தான் அவளது தங்கையை — வளர்ப்புத்தாயை மணந்து கொண்டேன்...'' என்று பூர்வீக சரித்திரத்தைக் கூறி முடித்தார் நடராஜா.

ராஜ்குமாரின் தாயார் அதிர்ந்து போய் நின்றாள். அவளால் சிறிது நேரம் பேச முடியவில்லை. ‘‘நீங்கள் சொல்வது உண்மையா?'' என்று மட்டுமே கேட்டாள்.

அலைபாய்ந்த நெஞ்சங்கள் அமைதியாவதில் இனிமேல் தடங்கல் எதுவும் இருக்காது

(முற்றும்)




"கொஞ்ச நேரம் அழுகிறதை நிப்பாட்டுங்கோவன்... ஆராவது தேவாரம் படிக்கட்டும்..."

என்று செல்லையா சொன்ன உடனே அதையே எதிர்பார்த்திருந்தவர் போல, சவத்தின் தலைமாட்டில் குந்தி இருந்து சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்த பொன்னையர் குரலைச் செருமிச் சுருதி சேர்த்துக் கொண்டு ஆரம்பித்து விட்டார்.

"பால் நினைந்தூட்டும்...... தாயினும்... சாலப்பரிந்து...ஆ.. ...ஆ...ஆ...ஆ... பால் நினைந்து ஊஊட்டும்...ம்..."

அவர் ஆலாபனை செய்து கொண்டிருக்கும்போதே ......... செல்லையாவின் தம்பி நல்லையா தனது சைக்கிளடிக்கு விரைந்து ஓடி, சைக்கிளில் தொங்கிக் கொண்டிருந்த கிழிந்த ஓலைப் பையினுள் துளாவித் தேவாரப் புத்தகம் ஒன்று அதுவும் இராம பாணப் பூச்சிகள் நன்றாகப் படித்துக் கிழித்த புத்தகம் எடுத்துக் கொண்டு வந்து கூட்டத்தின் நடுவில் சப்பாணி கொட்டி உட்கார்ந்து கொண்டார்.

மனைவி வள்ளிப்பிள்ளையும் மற்றவர்களும் பலதையும் சொல்லிச் சொல்லி புலம்புவதைத்தான்...... சகித்துக் கொள்ள முடியவில்லை என்று தேவாரம் படிக்கச் சொன்னால்...அந்த இதமற்ற கூச்சலும் மனத்திற்கு நிம்மதியைத் தராமல் போகவே...வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட வேண்டும் போன்றதொரு துறுதுறுப்பில் தவித்தார் செல்லையா. இந்த அகப் போராட்டங்களின் புறக் காட்சியாய்க்கண்களில் கனத்த நீர்த்துளிகளைச் சால்வைத் தலைப்பால் துடைத்துக் கொண்டார்.

"எங்கெழுந் தருளுவது இனியே......ஏ......ஏ......யே..." என்று பொன்னையர் இன்னதென்று ஒருவராலும் அடையாளம் காணமுடியாத ஒரு ராகத்தில் இழுத்துக் கொண்டிருக்கும் போதே, நல்லையர் தொடங்கி விட்டார்.

'பிணியெலாம் வரினும்
அஞ்சேன்,
பிறப்பினொ டிறப்பும்
அஞ்சேன்...'

அந்த இரண்டு ஊர்வழக்க மேளங்களில் யாருமே முறையானபண் முறையில் தேவாரம் திருவாசகம் பாடக் கூடியவர்கள் அல்ல என்பது இருவருக்குமே.ஏன் பொதுவாகஎல்லோருக்குமே—தெரிந்திருந்தாலும் தன்னைத் தொடர்ந்து படிக்க விடக் கூடாது என்ற எரிச்சலில், இந்த வீட்டில் இவருக்கென்ன தின்னாறு என்ற எண்ணத்தில்தான், நல்லையர் தன்னை வந்து நடுவில் குழப்புகிறார் என்பது மெதுவாகப் புரிந்த போது பொன்னையருக்கு உள்ளம் உள்ளுக்குள் நன்றாய் வெந்து மறுகியது.

"என்ன இருந்தாலும் செத்தது என்ரை தங்கச்சியின்ரை பிள்ளைதானே! நான் படிக்கிறதை எவன் தடுக்கேலும்?" மனதிற்குள் முறுகிக் கொண்டே அவர் அடுத்த பாடலைத் தொடங்குகிறார். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு, இருவரும் மிக ஒற்றுமையாய்.........மாறி மாறித் தேவாரம் படிப்பது போல் தோன்றும் அந்த நிகழ்வில் சூட்சுமமாய் நிலவுகின்ற போட்டியும் பூசலும் ஊமையடித் தாக்குதல்களும் விவகாரத் தெளிவு உள்ளவர்களுக்கு மட்டும் புரியும்.

திண்மையான உடலும் செழிப்பான முகமுமாய் இன்னும் உயிருடன் உறங்குவது போலவே படுத்திருக்கும் தன் மகனை... வெள்ளைப் பழந் துணியால் மூடிக் கட்டப்பட்டிருக்கும் அவனது அதரங்களைக் கூட, வெறி கொண்டவள் போல் கட்டி அணைத்து முத்தமிடுகிறாள் வள்ளிப்பிள்ளை.

"என்ரை தேவா! என்னை விட்டிட்டுப் போயிட்டியே...! ஐயோ! நான் இனி ஆற்றை உழைப்பைநம்பியிருப்பன்?..... அப்பூ...நான் என்ன செய்வன் என்னை இப்பிடிக் குழற விட்டிட்டுப் போட்டியே...ராசா!'' என்று இடையிடை பெரிய அவலக் குரல் எடுத்துப் பத்து வீட்டுக்குக் கேட்கும்படி குழறி அழுவதும், 'இடையிடை வார்த்தைகளற்று யோசிப்பதும் திடீரென்று மௌனமாய் உட்கார்ந்து மானசீகமாய்ப் புலம்புவதுமாய்... நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் வள்ளிப்பிள்ளையைப் பார்த்தால் கல் நெஞ்சங்கள் கூடக் கரையுந்தான். திருமணம் செய்து பார்க்க வேண்டிய வயதில் ஒரு இளைஞனைப் பறிகொடுத்து நிற்பதென்றால் அதுவும் ஒன்றும் இல்லாமல் வந்த காய்ச்சல் 'மெனிஞ்சைட்டிஸ்' என்ற பெயரில் அவன் உயிரைக் குடித்து விட்டுப் போவதென்றால்......எவருடைய உள்ளமும் நொந்து வலிக்கும்தான்.

கூட்டத்தின் தென்மேற்கு மூலையில் வட்டமாகக் குந்தியிருந்து பல விதமான ஊர்க் கதைகளைப் பல்லுக்குப் பதமாக மென்று தின்று கொண்டிருக்கிறது ஒரு பெண்கள் கூட்டம்.

"உதென்ன உப்பிடி ஒரு காய்ச்சல்...காய்ச்சல் வந்து மூண்டு நாளிலை உயிர் போறதை நான் எண்டால் இத்தினை வருசமாய்க் கேள்விப்படேல்லை''

மஞ்சள்'இந்தியன்வோயில்' தொடக்கி வைத்த கதைக்கு, பக்கத்தில் இருந்த பச்சைக் கலர் நைலக்ஸ் இரகசியக் குரலில் பதில் சொல்லுகிறது.

'ஆசுப்பத்திரியிலை இருக்கேக்கை கைகாலைப் போட்டு அடிச்சு எழும்பித் திரிஞ்சவனெல்லே...! நஞ்சைக் கிஞ்சைக் குடிச்சானோ ஆர் கண்டது? ' கிழக்குக் கரையில் இருந்த நீல போர்டர் ஆலி சேர்ந்து தாளம் போட்டது.

"உவையின்ரை குடும்பத்துக்குள்ளை நெடுகப் பிரச்சனை. செல்லையாற்றை ஆக்களுக்கும், வள்ளிப்பிள்ளையின்ரை ஆக்களுக்கும் இடையிலை சச்சரவு... பொடியனுக்கும் அதாலை கவலை ...தற்கொலை எண்டாலும் சொல்லுவினமே! பூசி மெழுகிப் போடுவினம்...''

அவர்களின் கதைக்குக் கையும் காலும் முளைக்கிற வேகத்தை பார்த்தால் மிக விரைவில் தற்கொலைதான் என்று நிரூபித்தே விடுவார்கள் போல இருந்தது.

இறந்து போன இளைஞனின் நண்பர்கள் போல் தோன்றிய ஒரு கூட்டத்தினர் வரிசையாக வந்து ஒரு மலர் வளையத்தை அவன் தலைமாட்டில் வைத்துவிட்டு கட்டிலைச் சுற்றி வந்து மரியாதை செலுத்திச் செல்லுகின்றனர்.

பச்சை நைலக்ஸ் மெதுவாக எழுந்து கொள்கிறது.

"நான் ஒருக்கா வீட்டை போட்டு வாறன்......பிள்ளையள் என்ன செய்யுதுகளோ தெரியாது...''

நீர்பாசனத்திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டு கழகத்தால் நடத்தப் பெற்ற அனைத்திலங்கை அடிப்படையிலமைந்த சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசுக்குரிய கதையை எழுதிய,



**கோகிலா - மகேந்திரன்**

முதல் நாள் இரவு எட்டு மணியளவில் அவன் உயிர் பிரிந்த உடனேயே நேர விரயம் செய்யாமல் அறிவிக்க வேண்டிய எல்லோருக்கும் தொலைபேசி செய்தி கொடுத்தாயிற்று. ஊரிலே ஒரு வீடும் மிச்சம் விடாமல் 'இளவு' சொல்லியாயிற்று. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் செல்லையாவின் இரண்டாவது மகன் சிவராஜா எப்படியும் இன்றைய மத்தியான யாழ்தேவியில் வர வேண்டும். அவனது வரவை எதிர் பார்த்துத்தான் கிரியைகளைக் கூடத் தொடங்காமல் எல்லோரும் காத்திருக்கிறார்கள்.

பக்கத்தில் இருந்த தன் வீட்டிற்குப் போயிருந்த பச்சை நைலக்ஸ் பத்தே நிமிடத்தில் திரும்பி வந்து விட்டது. வரும்போது பச்சை நைலக்ஸ் சிவப்பு ஜி—44 ஆக மாறி விட்டது. வந்ததும் வராததுமாகத்தான் சேலை மாற்றிய காரணத்தையும் அது அங்கிருந்தோர் மத்தியில் அம்பலப் படுத்திக் கொள்கிறது.

"கட்டி அழுதவையின்ரை கண்ணீரும் ... இதுகளும்...சீலை முழுதும் ஒரே அழுக்கு......... அந்தோடை எவ்வளவு நேரம் இருக்கிறது...?''

அந்தக் காரணத்தை முற்றாக அங்கீகரித்த மஞ்சள் இந்தியன் வோயில் தனது செம்மஞ்சள் ஆலியை மனதில் நினைத்துக் கொண்டு எழுந்து தன் வீட்டிற்குச் செல்கிறது.

"டாங்கு ..டுக்குடு...டுக்குடு .. டுக்குடு டாங்கு....டுக்குடு.... டுக்குடு...டாங்கு...டாங்கு......''

மேள ஒலியும் நல்லையர் பொன்னையரின் தேவாரக் கூச்சலும், பெண்களின் மாரடிப்பும் ஒப்பாரியும் மாறிமாறிக் கேட்ட படியே இருந்தாலும், சிவராஜா வரும் வரையில் செத்த வீடு களைகட்டவில்லை என்று தான் சொல்ல வேண்

மாலை மூன்று மணியளவில் அவன் வந்து சேர்ந்தான். சிவராஜாவை ஏற்றவென்று ஸ்டேசனுக்குப் போயிருந்த கார் ஒலி கேட்டதுமே, செத்த வீட்டில் களைத்துப்போய் மூலைக்கு மூலை உட்கார்ந்து ஊர்க்கதைகளையும் அரசியல் விவகாரங்களையும் அசைபோட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் சுறுசுறுப் படைந்தனர். காரிலிருந்து இறங்கிய சிவராஜா ஒரு அடி எடுத்து வைக்க முதலே ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள் வள்ளிப்பிள்ளை.

"கொண்ணனை உனக்கு உயிரோடை காட்ட முடியாத பாவியாகி விட்டனேடா! இனி ஆரெடா உனக்குப் படிப்புச் செலவு தரப் போயினம்? வருத்தம் எண்டு கூட உனக்கு அறிவிக்காமல் விட்டிட்டனே...... ஐயோ இப்படி நடக்குமெண்டு யார் கண்டது?...இந்தப் பிஞ்சு வயதிலை அவன் போகப் போறான் எண்டு...ஒரு சாத்திரி கூடச் சொல்லேல்லையே" என்று நெஞ்சில் பலமாக அடித்துக் கொண்டே தனது தாய் முழக்கித் தீர்த்த ஒப்பாரி சிவராஜாவின் உள்ளத்தின் உள்ளே சென்று வேதனை செய்கிறது. அவன் நெகிழ்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்ததைக் கண்டு செல்லையா நிலத்தில் விழுந்து உருண்டு பிரண்டு குழறுகிறார்.

"ஐயோ.......எனக்குக் கொள்ளி வைக்கவெண்டு உன்னைப் பெத்தனே...உனக்கு என்னைக் கொள்ளி வைக்க வைச்சிட்டுப் போட்டியேடா,ஐயோ என்னாலை ஏலாது... நான் வைக்க மாட்டேன்..."

செல்லையாவைத் தூக்கி அணைத்தபடி,

"இனி அழுது என்ன செய்யிறது? உந்த இங்கிலீசு வைத்தியங்களை நம்பி ஏமாந்து போனியள்...கையோடை என்னட்டை ஒரு ஆள் விட்டிருந்தா நான் காப்பாத்தித் தந்திருப்பேன்......இங்கிலீசு வைத்தியம் கைவிட்ட எத்தினையோ பேரை, என்ரை கற்பூரவள்ளிச் சாற்றில் உரைச்சுக் குடிக்கும் மாத்திரை காப்பாத்தியிருக்குது...இனி நடந்ததைக் கதைச்சு என்ன சுகம்? நடக்க வேண்டியதைப் பாருங்கோ...எழும்புங்கோ...." என்று செல்லையாவுக்கு ஆறுதல் கூறும் சாட்டில் தனது தமிழ் வைத்தியப் பெருமைகளைச் சரியான முறையில், பொருத்தமான இடத்தில் போட்டு வைக்கிறார் ராமுப் பரியாரியார்.

திடீரென்று நெருப்புப் பிடித்த மாதிரி "ஐயோ...... என்ரை ராசா... என்னடா மோசம் செய்து போட்டாய்" என்று இடையில் குழறுகிறார் தேவாரம் படித்துக் கொண்டிருந்த நல்லையர். அம்பு மாதிரி இடைக்கிடை தைக்கிற இந்தக் குமுறல்களுக்கு நடுவில், புலித் தோலில் அமர்ந்து கொண்ட சைவக் குருக்கள்தான் செய்ய வேண்டியகிரியைகளுக்கு ஆயத்தம் செய்கிறார்.

கிரியைகள் நடைபெறப் போகும் முற்றத்தைச் சாணியால் மெழுகவென நல்லையரின் மனைவியை யாரோ இழுத்துக் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள்.

"உன்ரை கலியாண வீட்டுக்கு முற்றம் மெழுகி, நிறைகுடம் வைக்கப் பார்த்திருந்த என்னை...என்னடா செய்ய விட்டிட்டாய்..." என்று கதறிய படியே சாணியை வைத்து நீர் ஊற்றுகிறாள் அவள். எங்கோ ஒரு மூலைத்தூணோடு சாய்ந்திருந்த பொன்னையர்,

"சிறிய தாய் முற்றம் மெழுகிறது எங்கத்தையில் வழக்கம் எண்டு எனக்கெண்டால் தெரியேல்லை...எல்லாம் தலை கீழாத்தான் நடக்குது இந்தச் செத்த வீட்டிலை..." என்று முணுமுணுத்துக் கொள்வது பக்கத்தில் இருந்த சிலருக்காவது கேட்கத்தான் செய்கிறது.

எந்தவித உணர்ச்சியுமின்றி எஃகு போல் இறுகிக் கனத்து நிற்கும் செல்லையா இப்போது நீராடித் திருநீறுக் குறி நெற்றியில் பளீரிட ஐயர் தந்த கற்பூரத்தை மகனுக்குக் காட்டித் திரும்புகிறார்.

தனது சோலிகளை எல்லாம் முடித்துக் கொண்டு 'கறுப்பும்' ஒரு அரை அடித்து விட்டு அப்போதுதான் செத்த வீட்டிற்கு வந்து சேர்ந்த நடேசச் சாத்திரியார்'.

"போன வருஷம் உவர் செல்லையற்றை சாதகம் பாக்கேக்கை நான் சொன்னனான். ...உனக்கு ஒரு பெரிய தத்து இருக்குதெண்டு...நான் சொன்னதை நம்பி உவர் தன்னையும் பெண்சாதி பிள்ளையளையும் கவனமாக வைச்சிருந்திருந்தால்... இப்பிடி நடக்குமே! நான்சொல்லுறதை ஒருத்தரும் பெரிசா எடுக்கிறேல்லை.......இனியாவது உவை எல்லாரும் என்ரை சாத்திரத்தை நம்புவினம்..." என்று தனது பெருமைகளை அங்கிருந்த யாருக்கோ அளந்து கொட்டிக் கொண்டிருந்தார்.

குளிப்பாட்டுவதற்காகச் சவத்தை வீட்டுக்குப் பின்புறம் கொண்டு போகிறார்கள். வெளியே நெற்றியைப் பிளக்கும் வேதனைப் புயல் வீசிக் கொண்டிருக்கும் சூழ்நிலை.

நெடுநேரமாகவே மிகவும் சூட்சுமமாகநடந்துகொண்டிருந்த அந்தச் சண்டை இப்போதுதான் வெடித்தது. குளிப்பாட்டி முடித்தவுடன் எவ்வாறு சவத்தை அலங்காரம் செய்வது என்பதில்தான் பிரச்சினை தொடங்கியது.

திருமணக் கோலத்திலை பார்க்க முடியாத அவனை மாப்பிள்ளைக் கோலத்திலை பட்டு வேட்டியும் சால்வையும் தலைப்பாகையுமாகத்தான்காட்டுக்கு அனுப்ப வேணும்" என்று பொன்னையா சொன்னார். நல்லையா அதற்கு உடன் படவில்லை.

"சொல்லுறவை எதையும் சொல்லுவினம்..... மாப்பிள்ளை மாதிரி உடுத்தி விட்டால்...... தாய் தகப்பன் என்னெண்டு அதைப் பார்த்துச் சகிப்பினம் வேதனையளைக் கூட்டிறதிலை ஒரு சந்தோஷமே.. ஒண்டும் வேண்டாம்......அவன் புதிசா வாங்கி வைச்சிருக்கிற களிசானும் சேட்டும் போட்டு விடுவம் அவ்வளவும் போதும்..."

அரப்பு எண்ணெய் காட்டுகிற போதும் நல்லையாவும் மனைவியுமே 'முன்னுக்கு' நின்றது பொன்னையருக்குத் திடீரென நினைவு வந்தது. பொதுவாக எல்லா விடயங்களிலுமே

நல்லையர் முன்னுக்கு நிற்க முயலுகிறார். அதுவும் தங்களை விட ஒருபடி குறைந்த இடத்தில் பெண் எடுத்த நல்லையா முன்னுக்கு நிற்கிறார் என்பதில் உள்ளூர வெதும்பிக் கொண்டிருந்த பொன்னையா இந்த இடத்தில் இறுக்கியே பிடித்துக் கொண்டார்.

"இல்லை......அது வேட்டிதான் உடுக்க வேணும். அதுதான் சைவ சமய மரபு......... தம்பி...நீ கொண்டா வேட்டியை......" பொன்னையா நெஞ்சை நிமிர்த்தி ஒரு ஆண் மகனுக்குரிய வீரத்துடன் முன்னால் வந்து சிவராஜா கொண்டு வந்த வேட்டியைக் கையில் எடுத்த போது, பொன்னையா சொன்னபடி இந்தச் சபையில் நடக்க விட்டு விட்டால்...தனக்கு இந்த வீட்டில் மதிப்பில்லை என்றாகி விடுமே என்று புழுங்கிய நல்லையா,

"உது உங்கடை பரம்பரைப் புத்தி! சாதிக்குணம்... எந்தச் சபையிலும் விஷயங்களைக் குழப்பிறது......" என்று சொல்லி விட்டார். இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததோ இல்லையோ,

"யாரடா அவன்.........? என்ரை சாதியைப் பற்றிக் கதைக்க வந்த வடுவா......... உன்ரை மனுசி எப்படியான சாதி எண்டு...நான் சொல்லட்டே ... சபையிலை சொல்லிக் காட்டட்டே......" என்று முழங்கிக் கொண்டே சுண்ணம் இடிக்கவெனக் கொணர்ந்து வைத்திருந்த உலக்கையைத் தூக்கிவிட்டார் பொன்னையர்.

'வடுவா......' என்று பொன்னையரால் அழைக்கப்பட்டு விட்ட அந்த ஆத்மார்த்தமான அவமதிப்பைத் தாங்க முடியாமல் தேங்காய் உடைக்க வைத்திருந்த கத்தியைத் தூக்கிக் கொண்டார் நல்லையா.

"இஞ்சை விடு பாப்பம்... என்னைப் பற்றிக் கதைக்க உவர் ஆர் எண்டு கேக்காமல் நான் விடமாட்டன்........." எங்கோ நின்ற நல்லையரின் மனைவி சேலையைத் தூக்கிச் செருகிக் கொண்டு முன்னால் ஓடி வந்தாள்.

பின்னால் நின்று எட்டிப் பார்த்த நீல போர்டர் ஊலி, சிவப்பு ஜி 44-க்குச் சொன்னது "பாத்தியே அக்கா...... நான் வெள்ளெனச் சொன்னது சரியாப் போச்சுது உவைக்குள்ளை நெடுகப் பிரச்சினை...யார் சாதியிலை கூட எண்டு......இனி இப்போதைக்குச் சவம் தூக்க மாட்டினம். நான் போகப் போறன்..."

'நில்லுங்கோஎன்னநடக்குதெண்டு பார்த்திட்டுப் போவம்..வெட்டுப் பட்டாலும் வெட்டுப் படுவினம் போலை இருக்கு:..' ஜி44 க்குப் புதினம் பார்க்காமல் போக விருப்பமில்லை. எப்போது வெட்டுப் படுவார்கள் என்பது போல் எட்டி எட்டிப் பார்த்தது அது.

"கேடு கெட்ட சாதியளோடை உங்களுக்கு என்ன கதை, நீங்கள் வெளியிலை வாருங்கோ" என்று பொன்னையரின் கையைப் பிடித்து இழுத்தாள் பொன்னையரின் மனைவி.

வெறி அடங்காத பொன்னையர், "விடு என்ரை கையை ...உவங்களை ஒரு கை பார்க்கத்தான் வேணும்...குட்டக் குட்டக் குனியிரவன் எண்டு நினைச்சுக் கொண்டாங்கள் என்னை..." என்று இரைந்து கொண்டு மனைவியின் பிடியிலிருந்து திமிறித் திரும்பினார்.

நல்லையரின் உறவினர் போல் தோன்றிய சில இளைஞர்கள் பந்தலுக்குப் போடப்பட்டிருந்த தடிகளை முறித்துக் கொள்ள, பொன்னையரின் மனைவியின் சகோதரர்கள் நிலத்தில் போடப்பட்டிருந்த பச்சை ஓலைகளைத் தூக்கிக் கொண்டனர்.

பல பெண்கள் பயந்து எழுந்து அங்கும் இங்குமாகச் சிதறி ஓடியதில் யாரோ நீல 'போர்டரை' நெரித்துத் தள்ள அது ஜீ44க்கு மேலே விழுந்து எழுந்தது. எல்லோரும் ஒரே நேரத்தில் கதைத்துக் கொள்ளும் கூச்சலும், குழந்தைகள் சிலரின் வீரிட்டு அலறும் அழுகை ஒலியும் அங்கே செல்லையாவின் சொந்தக்காரரா அல்லது வள்ளிப் பிள்ளையின் சொந்தக்காரரா சாதியில் உயர்ந்தவர்கள் என்பதை வாய்ச் சொல் வீரத்தினால் நிரூபணம் செய்து விடுவதிலேயே பலரும் மிகக் கவனமாக இருக்கிறார்கள்.

உறவினர் அல்லாத, அயலவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்களில் பலர் "இனி உவை சமாதானப் பட்டுச் சவம் தூக்க இருளும். நாங்கள் போவம்..." என்று பேசிக் கொண்டு தங்கள் பாட்டில் விலகிக் கொண்டனர்.

சற்று நேரத்திற்கு முன் பெரிய கூட்டமாய் இருந்த முற்றத்தில், இப்போது நடமாட்டம் குறைந்து விட்டது. காலையில் இருந்து இவ்வளவு நேரமும் துல்லியமாகத் தெரிந்து கொண்டிருந்த கவலைகள் எல்லாம் எங்கே போனதென்று தெரியாத ஒரு திசையில் போய் விட்டன போல் தோன்றுகிறது. யார் செத்தாலென்ன, இருந்தாலென்ன —உயிருடன்: இருக்கின்றவர்ககளில் யார் சாதியில் உயர்ந்தவர் என்பது தான் இப்போது பிரச்சினை.


நாலு பக்கத்திலுமிருந்து வியூகம் அமைத்து எல்லோருமாய்த் தன்னையே தாக்குவது போலிருந்தது செல்லையாவுக்கு.

"என்ரை பிள்ளையை ஒருத்தரும் தொடப்படாது...நான் தனியத் தூக்கிக் கொண்டு போய்க் கொள்ளி வைச்சிட்டு வருவன்......எல்லா நாயளும் வெளியிலை போங்கோ.. ..."!

செல்லையாவின் கோபம் எல்லை மீறி, வார்த்தைகள் நெருப்பு நெருப்பாய் வெளிவர, அவரின் இதயம் நின்று விடுவது போல் துடிக்கச் சிங்கம் போல சிலிர்த்தார் அவர்.

இளைஞனை இறந்துவிட்டதன் பிரிவினால் கவலை கொண்டு போய் எரிக்க வேண்டுமே என்று கூட யாருக்கும் அக்கறை இல்லை......தமது சொந்தத் திறமைகளைப் பறைசாற்றிக் கொள்வதற்கும், தமது உயர் சாதிப் பெருமைகளை நிரூபணம் செய்து கொள்வதற்கும், தம்மை விளம்பரம் செய்து சொள்வதற்கும்—இந்தச் சனக்கூட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சுய நல நோக்கத்திற்காகவே எல்லோரும் வந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும் அசிங்கமான பல நிகழ்தகவுகளைத் தரிசித்துக்கொண்டே, அந்தஇளைஞனின் சவம் அங்கே கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

# அழியா ஓவியம்



சாரதா. சண்முகநாதன்

எல்லா வேலைகளும் பூர்த்தியாகி விட்ட நிறைவோடு எழுந்து நின்ற வர்மன் சற்றே தூரத்தில் போய் நின்று அதை ஒருவித கனிவோடு பார்த்தான். அங்கே உலகத்தின் வனப்புக்களை எல்லாம் ஒருங்கே வடித்தெடுத்தது போல ஓர் ஒழியுருவம் ஏக்கப் பார்வை ஒன்றை தலைசாய்த்தபடி சூனிய வெளியில் படரவிட்டுக்கொண்டிருந்தது.

அந்தப் பார்வையில் வர்மனின் கண் ஊடுருவியதும் அவனது இதயமே ஒரு கணம் அதிர்ந்தது. ஓடிப்போய் அந்த ஓவியப் பெண்ணை கட்டிப் பிடித்து உச்சிமோர்ந்து தன் அன்பின் பாரத்தினை அதன் வழி புகுத்தி அந்தப் பார்வையில் கனிவினை மகிழ்வினைப் பொழியவைக்க வேண்டும் என அவனது ஆத்மா துடிதுடித்தது. முடியவில்லை.

தூரிகைகள் உலராத நிலையில் இருக்கும் அந்த எழிலணங்கின் அழகு அணைப்பில் அழிந்த கோலமாகி விடுமோ என தன் உணர்வுகளுக்கு கடிவாளமிட்டு தனக்குள்ளே மௌன பாஷையில் அவளோடு என்னென்னவோ பேசினான். புலம்பினான். கண்களிலே கண்ணீர்ப்பூக்கள் திடீரென்று அவன் மனம் பாறையில் ஒரு சிற்றுளியின் தாக்கம்—ஓ! என் சொந்த நலனுக்காக என் ஜீவனை விற்கிறதா? ஒரு கணம் தன்னை அந்நியமாக்கி எடை போட்டதை நினைத்து வெட்கினான். இந்த அவலம் நிறைந்த அவனியில் நானும் ஆசைக்கு உட்பட்ட ஒரு சராசரி ஜீவன் தானே என.

அதற்கு மறுப்புத் தெரிவித்தாற் போல கலகலவென அவளிடமிருந்து ஓர் சிரிப்பொலி. ஓவியப் பெண்தான் சிரித்தாள். இரண்டு வருடமாக தூரிகையை தொடாத—தொடவே கூடாததென்ற தன் வைராக்கியத்தை மீறிய ஆத்மாவின் பீறிடலுக்கு இவர்தான் காரணமோ — அல்லது நான்கு நாட்களாக அன்ன ஆகாரமின்றி இரையும் வயிறுதான் காரணமோ...அது என்றாலும் வர்மனை ஆட்டிப் படைக்கும் அந்த அடங்காத்

**4ம் பரிசு பெற்ற மணிக்கதை.**

தாகத்தில் உயிர் பெற்றது தான் அந்த ஓவியம்.

போட்டிக்காக அதனை அனுப்பி வைத்தான். கங்கையின் நீர்விளிம்பில் நின்று எதையோ எதிர்பார்க்கும் அந்த ஏந்திழைக் கோலத்திற்கு அவன் எதிர்பார்த்தபடியே முதற் பரிசு கிடைத்தது. பத்தாயிரம் ரூபாய். பண முடிச்சைவிட மனமே அதிகமாகக் கனத்தது. எத்தனையோ பேர் அவன் சிருஷ்டியை பாராட்டினர். வீடு தேடிவந்தும் புகழ்ந்தனர். அந்தப் புகழ்ச்சியில்—பாராட்டில் மயங்காத அவனது இதயமோ தன்னுள் ஏதோ ஒன்று பொடிப் பொடியாய் உதிர்வது போலவும் — அங்கே வெறுமை ஆழ்வதையும் உணர்ந்து அவன் நேரே தன் பூஜை அறைக்குள் நுழைந்தான் அங்கேயும் உனது பக்தியின் சுகந்த மணத்துள் நடுவே அந்த ஓவியப் பெண் சிரித்துக் கொண்டிருந்தாள். வர்மன் அப்படத்தின் கீழ் அந்தப் பணத்தை சமர்ப்பித்து இரண்டு சொட்டு கண்ணீரை காணிக்கையாக்கினான்.

ஓ! என் தங்கையே - மல்லிகா உன் கல்யாணத்தின் போது உன் கணவனுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி என்னால் கொடுக்க முடியாமல் போன அந்தப் பத்தாயிரம் ரூபாய்க்காக-வீட்டைவிட்டே துரத்தப்பட்ட வேதனை - உன் அண்ணாவின் வறுமை - இரண்டையும் ஒப்புநோக்கி அக்கினியில் புகுத்தி அழித்தாயே உன் பொன்னுடலை,

நீ உன் உடலை கருக்கலாம். ஆனால் 'நீ, இந்த நீச சமுதாயத்தில் வாழும் உன் அண்ணாவுக்காக, இன்னும் அழியா ஓவியமாய் சுடர் விடவேணுமென நினைத்தாயாம்மா- அல்லது அழகை ஆராதிக்கத் தெரியாத மனிதர்களுக்கு முன்னால் என்றும் உயிரோவியமாய் நடமாட வேண்டுமென்று உயிர் பெற்றாயா? ஒரு முடிவோடு வர்மன்... தன் கண்ணீரை சுண்டி எறிந்துவிட்டு எழுகின்றான்

அந்தப் பத்தாயிரம். ரூபாயையும்கொண்டு போய்மல்லிகாவின் கணவனது கையில் விட்டெறிந்துவிட்டு- என் தங்கை என்நெஞ்சில் என்றும் வாழ்கிறாள் என்ற நிம்மதியோடு வெளியேறிக்கொண்டிருந்தான். **(யாவும் கற்பனை)**

# நன்றி சொல்ல வேண்டும்

-ச. முருகானந்தன்-



**"சுதா**, இன்னுமா ரெடியாகலே..." பரபரத்தான் சங்கர்.

"இதோ வந்திட்டேன்......"

கடந்த அரைமணிநேரமாக கண்ணாடி முன்னே அலங்காரத்தில் ஈடுபட்டிருந்த சுதா குரல் கொடுத்தாள்.

"சீக்கிரம் புறப்படு சுதா... இன்னும் லேட்டானா பொண்ணு கழுத்துல தாலி ஏறிய பின்தான் நாம போய் சேருவோம்......"

"நான் ரெடி அத்தான்..." என்று சிரித்தபடி வெளியே வந்தாள் சுதா! அப்படியே அவளை அள்ளிக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு — அத்தனை அழகு! சாறி மிகவும் எடுப்பாக இருந்தது, பொருத்தமான பிளவுஸ், தோலின் பளபளப்போடு போட்டியிடும் மஞ்சள் நிறம், ஒரு தேவதை போல் காட்சியளித்தாள் சுதா!

அவளையே அள்ளிப்பருகுவது போல பார்த்துக் கொண்டிருந்தான் சங்கர். ஏதோ ஒரு குறை இத்தனைக்கும் மேலாக அவனுக்குத் தெரிந்தது.

"என்ன அப்படியே விழுங்குமாப் போல பாக்குறீங்க?" அவள் நாணத்தோடு தலை குனிந்தாள். திருமணமாகி மூன்று மாதங்கள் கழிந்து விட்ட பின்னரும், பெண்மைக்கேயுரிய நாணம் இன்னும் அவளைப்பற்றியிருந்தது.

"இல்லை சுதா... வெறும் தாலியுடன் புறப்பட்டுட்டே.... சங்கிலி, நெக்கிளேஸ், காப்புகள், மூக்குத்தி ...... எதையுமே அணியலையே?." சங்கர் கேட்கையில் அவளுக்குத் 'திக்' என்றது. எனினும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கல்யாணம் முடிந்து வீடு திரும்ப நேரமாயிடும்... இரவு நேரம் ஊரே கெட்டுக் கிடக்கு... திருட்டுப் பயம்..." என்றாள்.

அவன் கேட்கவில்லை, "நீ நகைகள் இல்லாமல் போனால் உறவுக்காரர்கள் ஏதாவது நினைப்பார்கள்... மட்டமாக எடைபோடுவார்கள்... எல்லா நகைகளையும் அணிந்துகொண்டு வா... ....."

**3ம் பரிசு பெற்ற மணிக்கதை**

சுதா தயங்கினாள். அவளது குதூகலம் எல்லாம் போய் விட்டது.

சுதா ஒரு ஏழை வாத்தியாரின் மூன்றாவது பெண். மூத்த இரண்டு பெண்களுக்கும் கலியாணம் செய்து வைத்ததோடு வாத்தியார் ஓட்டாண்டியாகி விட்டார். சுதாவின் கலியாணத்தை அவரால் நிறைவேற்ற முடியாமல் இருந்ததற்குக் காரணமே பணக்கஷ்டம்தான். எங்கு திருமணம் பேசிச் சென்றாலும் சீதனம் அதிகமாக எதிர்பார்த்தார்கள். இதனால் அவளது கலியாணம் கால தாமதமாகிக் கொண்டே வந்தது. வயதும் ஏறிக் கொண்டிருந்ததால் வாத்தியாருக்கு ஒரே மனக் கவலை. இந்தநேரத்தில் தான் சங்கரன் சாதகக் குறிப்பைக் கொண்டு வந்தார் ஒரு தரகர். சுதாவின் சாதகத்தோடு நூற்றுக்கு நூறு பொருந்தியிருந்தது. சங்கரின் அம்மா சீதனப் பணம், வீடு வாசல் என்று எதையுமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் பெண் அழகியாக இருக்கவேண்டுமென்றும் இருபது பவுணில் நகைகள் போடவேண்டும் என்றும் கேட்டிருந்தார். கடனில் மூழ்கியிருந்த வாத்தியாருக்கு இருபது பவுண் நகை போட ஏது மார்க்கம்? என்றாலும் இந்தச் சம்பந்தத்தை கை விடவும் மனமில்லை. ஆயிரம் பொய்யைச் சொல்லியும் ஒரு கலியாணத்தை 'செய்' என்பதற்கமைய அவரும் தனது நாணயத்தை காற்றில் பறக்க விட்டு விட்டு ஒரு முடிவுக்கு வந்தார். எல்லாவற்றிற்குமே சம்மதம் என்று தரகரிடம் கூறிவிட்டார்.

"அப்பா நகைகளுக்கு என்ன செய்யப் போறீங்க?" என்றாள் சுதா.

"நீ யோசிக்காதேயம்மா... கடன் பட்டாவது உன் காரியத்தை நிறைறேற்றுவேன்..." என்றார். சொன்ன மாதிரியே கலியாணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் நகைகள் வந்து விட்டன. சுதா பூரித்துப் போனாள்.

திருமண நாளன்று சுதா 'பளிச்' என்று தோன்றினாள்.

அடுத்த வாரமே அவளுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அப்பா அவளை தனியே அழைத்துச் சொன்ன வார்த்தைகளை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. "சுதா .. எப்படியாவது உனது கலியாணத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற வேகத்தில் ஒரு பாரதூரமான காரியத்தைச் செய்து விட்டேன்... ..... உன்னுடைய நகைகள் அனைத்துமே கில்லுட்டு நகைகள், பவுண் நகைகள் அல்ல......"

அந்தச் சேதியை கேட்டதிலிருந்து சுதாவுக்கு ஒரே கலக்கம், இந்த விபரம் கணவ

னுக்கு தெரியவந்தால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படுமோ என்று பயந்தாள். இந்த மூன்றுமாத இடைவெளிக்குள் நகைகளும் சிறிது பொலிவிழந்து காட்சியளித்தன. இப்போது கலியாண வீட்டுக்கு அணிந்து கொண்டு போக, யாராவது அடையாளம் கண்டு கூறிவிட்டால்...... இதனுல் தான் அவள் நகைகளை அணியாமல் றெடியாகியிருந்தாள். ஆனல் இப்போது சங்கர் வற்புறுத்தும்போது அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. கணவனிடம் உண்மை நிலையைச் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தவள், அதனுல் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை எண்ணி மௌனமானுள்.

மீண்டும் அறைக்குள் சென்று அணிந்து கொண்டு வெளியே வந்தபோது சங்கர் அவள் அழகைப்பாராட்டினுன்.

திருமண வீட்டில் அவள் பயந்தது போல யாரும் 'போலி' நகைகள் என்பதைக் கண்டு பிடிக்காதது அவளுக்கு நிம்மதியைக் கொடுத்தது.

கலியாண வீட்டில் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு புறப்பட இரவு பத்து மணியை தாண்டி விட்டது. பஸ் எடுத்து வீட்டிற்குப் போக இனி பஸ் இல்லை என்பதால் டாக்ஸியில் போக உத்தேசித்தான் சங்கர். நீண்ட நேரத்தின் பின்னர் தான் டாக்ஸியும் கிடைத்தது.

இடைவழியில் நடுரோட்டில் நின்று கொண்டு டாக்ஸியை மறித்தார்கள் இரண்டு காடையர்கள். அவர்களது கையில் துப்பாக்கி!

சங்கருக்கும், சுதாவுக்கும் திக்' என்றது.

ஒருவன் டாக்ஸி டிரைவரின் தலைக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு நிற்க மற்றவன் பின்னுக்கு வந்து "மரியாதையாக நகைகளைக் கழட்டிக் கொடுத்திடுங்க... இல்லா விட்டால் சுட்டு விடுவேன்..." என்ருன்.

சங்கர் சுதாவைப் பார்த்தான். சுதா நகைகளை ஒவ்வொன்ருகக் கழற்றிக் கொடுத்தாள். நகையைப் பெற்றுக் கொண்ட திருடர்கள் அவர்களைப் போக விட்டார்கள்.

"ஐயோ சுதா... உன் நகைகள் யாவும் போய் விட்டதே' சங்கர் அலறினுன்.

"அத்தான்... எமது உயிர் தப்பியதே போதும்... தாலியை அவர்கள் கவனிக்கவில்லை...... எனது மாங்கல்யம் தப்பியதே, போதும்" என்ருள்.

ஒரு பெரிய பிரச்சினை தீர்ந்த நிம்மதி அவளுக்கு!

மானசீகமாக அவர்களுக்கு நன்றி சொன்னுள்!

(கற்பனையே)

---

# யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் நடாத்தும் "விடிவெள்ளி"

## கே. பி. முத்தையா நினைவு சிறுகதைப் போட்டி

| | |
|---|---|
| முதற்பரிசு | - ரூபா 300-00 |
| இரண்டாம் பரிசு | —ரூபா 200-00 |
| மூன்ரும் பரிசு | —ரூபா 100-00 |

ரூபா 50/- கொண்ட ஆறுதல் பரிசில்கள் எட்டு

## முடிவு திகதி — 15 .7.1981

அகில இலங்கை ரீதியில் நடைபெறும் இச்சிறுகதைப்போட்டிக்கு ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானுலும் அனுப்பலாம். கதைகள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். தபால் உறை இடது மூலையில்" விடிவெள்ளி " கே. பி. முத்தையா நினைவு சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் வேண்டும். கதைகள் வே. ப. வாரித்தம்பி, தலைவர், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் மீசாலை என்னும் முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும், பரிசுக் கதைகள் புத்தகமாக வெளியிடும் முதல் உரிமை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்திற்கு இருக்கும்.

# வாசகர் வாய்மொழி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## உறவாடும் உள்ளம்

மனம் விட்டு உண்மைகளை உரைத்திடும் 'அரி'' அண்ணுவுக்கு என் நன்றி! இதுவரையில் எந்த ஆசிரியரும் வாசகரின் உள்ளத்தோடு உறவாடியது கிடையாது. ஆனுல் ''கரிகாலன்'' ஆசிரியர் ''இளம் எழுத்தாளனே'' என விழித்து இனிமையாக... இதமாக இதயராகத்தின் நரம்புகளை மீட்டி இயம்பவேண்டியதைக் கூறியிருக்கும் விதம் என்னைக் கவர்ந்திருக்கிறது. முகத்துக்கு அல்ல - தரத்துக்கே முன்னுரிமை நம்புங்கள் ......என்று கூறும் வார்த்தைகள் ஆக்கங்களை அனுப்பிவிட்டு ஏங்கும் இதயங்களுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

செல்வி: K. தேன்மொழி,
இல: 33, தெம்பரவ,
அறணுயக்க

## நல்லதோர் சாட்டை!

பங்குனி சுடர் இதழில் வெளிவந்த 'பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட' என்ற பரிசுக்கதையும், மினிக்கதையும் நன்ருக அமைந்திருந்தன. சாதிப்பாகுபாட்டைக் கருப்பொருளாக வைத்து எழுதப்பட்ட மினிக்கதையில் வந்த சங்கரப்பிள்ளை போன்ற மனிதர்களுக்கு நல்ல ஒரு சாட்டையாக அமைந்தது.

கனக. பிரதீபன் கொக்குவில் மேற்கு
கேணியடி.

## பணி மகத்தானது!

வே. தில்லைநாதனின் பாலுக்குப் பாலகன் என்ற சிறுகதை மிகவும் தரமானது. பரிசுக்குப் பொருத்தமானது. இன்றைய காலகட்டத்தை அப்படியே பிரதிபலித்துக் காட்டுவது. இத்தகைய கதைகளை வெளியிட்டு இலக்கியகாரரை ஊக்குவிக்கும் பணி மகத்தானது. எனது பாராட்டுக்கள்.

சிணுச்சாணு
சாவகச்சேரி

## அமிர்தமாய் வளர்க!

கரிகாலன் சுடருக்கு கடிவாளமிட்டு வழி
நடத்த
அரியவனும் துணையாய் அருகிருக்க—விரிமனத்
தமிழர்கள் இதழாய்; தமிழ்சுவை பரப்புநல்
அமிர்தமாய் வளர்க நிலைத்து.

மன்ருசியூர், -யோகதாசமுரளி.
அக்கரப்பத்தனை.

## அட்டையில் அழகுச்சிலை!

அட்டை முகந்தன்னில் அழகுச்சிலையாய்
நீள் விழிகள்
நிஷ்டையில் ஆழவிட்ட சித்திர(ை) பாவையின்
சிந்தை கவர இசையெழுப்பும் இளவல்தன்னை
இசைந்து வரைந்திட்ட நிர்மலுக்கு நின்
பாராட்டுடன், மனம் விட்டு சில
வார்த்தைகளை மனம் தாளா மலர்த்திவிட்ட
'அரி'' அண்ணனுக்கும், நகையோடு
நயமான பதில் தந்திட்ட ''கரிகாலன்''
அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

செல்வி. கங்கா-மங்கை
சரசாலை, சாவகச்சேரி

## கண்டேன் பெருமை!

'மண்ணின் மலர்' என்ற ஆசிரியர் கருத்தோடு
மணிக்கதைகள் என்ற புதிய அடக்கத்தோடு
மலர்ந்த சித்திரை இதழ் கண்டு
மகிழ்வுற்றேன், மலரின் பெருமை கண்டேன்.

அ. சுரேஸ்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## 'விட்டமின் நிறைந்தது'

சித்திரைச் சுடர் கண்ணுற்றேன். அட்டைப்படம் பிரமாதம். ஆசிரியர் தலையங்கம்அசல்' மணிக்கதைகள் மணியாக இருந்தன. பரிசுக்குரிய கதைகள், மற்றும் கவிச்சரங்கள் போற்றக்கூடியன. கரிகாலன் பதில்கள் சிரிக்க வைப்பதோடு சிந்திக்க வைக்கின்றன. மலிவான சஞ்சிகைகளில் ''விட்டமின்''கள் நிறைந்துள்ள ஒரு சஞ்சிகையென்ருல் ஈழத்தில் அது சுடராகத்தான் இருக்கும்.

—செல்வி. அ. கௌரி—
ஆலையூர் - 1.

## மாணவ மணிகளே !

உங்கள் சீருடைகளை துரிதமாகவும் மேலும் பிரகாசமாகவும் சலவை செய்ய ''மில்க்வைற் சலவைப்பவுடரை'' வாங்கி உபயோகியுங்கள்.

மேலுறைகளை சேகரித்து அனுப்பி **மில்க்வைற்** அப்பியாசக் கொப்பியையும், **அறிவுநூல்களையும்**. மில்க்வைற் செய்தியையும், மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**"மில்க்வைற்"**

**த. பெ. எண் - 77, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 7233.





## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுதுபோக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

**சுடர் நண்பர் வட்டம்**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## 'சுடர்' சந்தா விபரம்

**ஆறு திங்கள் — 13-00**
**ஒரு ஆண்டு — 25-00**
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

# பிரவுண்சன் கோப்பி

இது 100% கலப்பற்றது; சுத்தமானது என்பதற்கு உத்தரவாதம் உண்டு



நகர்களின்
சிறந்த
கடைகளில்
விற்பனையாகிறது




விற்பனை விசாரணைகளுக்கு:

**பிரவுண்சன்
இண்டஸ்ரீஸ்**

80-4/1 பிறைஸ் பிளேஸ்,
கொழும்பு-12.

தொலைபேசி : 27197


இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு—12இல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.